# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2017


நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்
பீ பிரிவு, 3 ஆம் மாடி,
செத்சிறிபாய கட்டம் II,
பத்தரமுல்லை.

உள்ளடக்கம்


**1. அறிமுகம .................................................. 1**

1.1 திணைக்களத்தின் வரலாறு .................................................. 2
1.2 மாகாண சபைகளைத் தாபித்தல் மற்றும் திணைக்களத்தின் தத்துவங்கள் ...... 3
1.3 எமது நோக்கு .................................................. 4
1.4 எமது செயற்பணி .................................................. 4
1.5 எமது பெறுமானங்கள் .................................................. 4
1.6 எமது அர்ப்பணிப்பு .................................................. 5
1.7 நிகழ்ச்சித்திட்டங்கள் .................................................. 6
1.8 திணைக்கள ஒழுங்கமைப்பு மற்றும் பதவியணியை ஈடுபடுத்தல் .......................... 7

**2. தாபன மற்றும் நிருவாகப் பிரிவு .................................................. 9**

2.1 தாபன மற்றும் நிருவாகப் பிரிவின் பிரதான செயற்பணி .......................................... 10
2.2 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி .......................................... 11
2.2.1 வெளிக்கள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் .......................................... 11

**3. கணக்குகள் பிரிவு .................................................. 14**

3.1 நிதிசார் முன்னேற்றம் .................................................. 15
3.2 கணக்காய்வு அவதானிப்பு .................................................. 17

**4. நன்னடத்தை நடவடிக்கைகள் .................................................. 18**

4.1 அறிமுகம .................................................. 19
4.2 சிறுவர்களை தத்தெடுத்தல் .................................................. 20
4.3 வெளிநாட்டுத் தத்தெடுத்தல்களுக்காக ஒதுக்கப்பட்ட சிறுவர்கள் - 2017 ........... 21

**5. அபிவிருத்திப் பிரிவின் நடவடிக்கைகள் .................................................. 22**

5.1 அறிமுகம் .................................................. 23
5.2 சிறுவர்களின் சமூக பாதுகாப்புக்கான செயற்றிட்டம் 2017 – 2018 ...................... 24
5.3 செவண சரண பெற்றார் பாதுகாவளர் திட்டம் .................................................. 25

5.4 சிறுவர்களின் கல்வி உரிமையை உறுதி செய்வதற்கான கல்வி உதவி .......... 26
5.5 கெப்பகரு பெற்றார் பதுகாவளர் நிகழ்ச்சித்திட்டம்.................................................... 27
5.6 நெனதிறிய கல்விப் புலமைப் பரிசில் திட்டம்............................................................ 29
5.7 இரட்டைப் பிள்ளைகளுக்கான உதவி ......................................................................... 29
5.8 மருத்துவ உதவி ......................................................................................................... 31
5.9 திடீர் விபத்து உதவி .................................................................................................. 33
5.10 செனெஹச சேமிப்புக் கணக்கு...................................................................................... 34
5.11 சிறுவர் கழகங்கள் மற்றும் சிறுவர் சபைகளைத் தாபிக்கும் கருத்திட்டம் ......... 35
5.12 வீதிச் சிறுவர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டம்........................................42
5.13 சிறுவர் மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம் - 2017 .................................................. 43
5.14 சிறுவர் உரிமைகள் பற்றிய நடவடிக்கைக் குழு நிகழ்ச்சித்திட்டம் ...................... 44
5.15 சிறுவர் நட்புறவு நிலையங்கள்.................................................................................... 45
5.16 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் ...................................................................... 45
5.17 பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகள் தேசிய நிலையம்...... 46
5.18 சிறுவர் இல்லங்களின் தரத்தை மேம்படுத்தல் .......................................................... 47
5.19 நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் ஆற்றல்களை வளர்த்தல்................ 47
5.20 சிறுவர் இல்லங்களைக் கண்காணிப்புச் செய்தல் ..................................................... 48
5.21 யுனிசெவ் கருத்திட்டம்.............................................................................................. 48
5.22 2017 உலக சிறுவர் தினம்........................................................................................... 48
5.23 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் பற்றிய தகவல்கள்.................................... 49
5.24 பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்தல்............................................................... 52
5.25 சிறுவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு...............................................54
5.26 தெற்காசிய பிராந்திய நாடுகளின் பிள்ளைகளுக்கு எதிரான துன்புறுத்தலை ஒழிப்பதற்கான அமைப்புடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்.....................55
5.27 கொமன் பொண்ட் கருத்திட்டத்தில் சிறுவர் கழக பிரதிநிதிகளை ஈடுபடுத்தல்.56
5.28 கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தல்........................................................................................................... 56

# 1. அறிமுகம்

2017 ஆம் ஆண்டு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட சேவைகள் தொடர்பில் இந்த அறிக்கையில் மீளாய்வு செய்யப்படுகின்றது.

## 1.1 திணைக்களத்தின் வரலாறு

ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டுகளில் இலங்கையில் நீதிமன்றத்தினால் நன்னடத்தை முறை பரீட்சார்த்தமாக அமுல்படுத்தப்பட்டது. 1907 இல் இங்கிலாந்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட தவறாளிகள் தொடர்பான நன்னடத்தை கட்டளைச் சட்டம் இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் தொடர்பிலும் தாக்கம் செலுத்தியது. 1944 இல் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட 22 ஆம் இலக்க நன்னடத்தை கட்டளைச் சட்டமானது மேலே குறிப்பிடப்பட்ட தாக்கங்களின் பெறுபேறாகும். இந்தக் கட்டளைச் சட்டத்தின் மூலம் நன்னடத்தை முறை இலங்கை நீதிமன்றங்களிலும் அமுலுக்கு வந்தது. இங்கிலாந்தின் நன்னடத்தைச் சேவைகள் ஊடாக இலங்கையிலும் நன்னடத்தைச் சேவைகளை ஆரம்பிக்கும் செயற்பணி, இங்கிலாந்தின் மதியுரையாளரொருவரான திரு எச்.ஏ. லீடீனிடம் பொறுப்பளிக்கப்பட்டதுடன், அதற்கமைய சிறைச்சாலைகள் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட நன்னடத்தைச் சேவைகள், நன்னடத்தை அலுவலர்கள் சிலர் ஊடாக முன்னெடுக்கப்பட்டன. பரீட்சார்த்தமாக நாட்டிலுள்ள ஒரு சில நீதிமன்ற பிரிவுகளில் மாத்திரம் அமுல்படுத்தப்பட்ட பின்னர் இந்த சேவை நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனையடுத்து இச்சேவையை மேம்படுத்த வேண்டிய தேவையும் எழுந்தது.

1949 இல் நீதிபதி திரு கிரேசியனின் தலைமையில் நியமனம் செய்யப்பட்ட குழுவின் சிபாரிசுள் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடுத்து நாடு முழுவதும் சகல நீதிமன்ற வலயங்களும் உள்ளடக்கப்படும் வகையில் நன்னடத்தைச் சேவை விஸ்தரிக்கப்பட்டது. இந்த சேவையின் நிர்வாக நடவடிக்கைகள் சிறைச்சாலை மற்றும் நன்னடத்தைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

குழந்தை, இளைஞர் கட்டளைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை மற்றும் சிறுவர் நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சிறுவர்களுக்கு ஆற்றப்படுகின்ற சேவைகளை ஒன்றுதிரட்டுவதன் முக்கியத்துவம் தொடர்பாக திரு சிறில் ஹெம்லீனின் அறிக்கையினூடாக சுட்டிக்காட்டப்பட்டது. மேற்படி சிபாரிசுக்கு அமைய 1956 அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு 1956 இல் ஆரம்பிக்கப்பட்ட திணைக்களம் முதலில் சமூக சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அடிக்கடி பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இதனைக் கொண்டு வந்தன. 1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இது மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, சமூக நலன்புரி அமைச்சின் கீழும், 1994 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் சுகாதார, பெருந்தெருக்கள், சமூக சேவைகள் அமைச்சின் கீழும், 2001 ஆம் ஆண்டில் சமூக சேவைகள், மீனவர் சமுதாய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழும், 2002 இல் சுகாதார போசாக்கு, நலன்புரி அமைச்சின் கீழும், 2003 இல் சமூக நலன்புரி அமைச்சின் கீழும், 2004 ஆம் ஆண்டில் மகளிர் அபிவிருத்தி, சமூக நலன்புரி அமைச்சின் கீழும், 2005 ஆம் ஆண்டு முதல் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அபிவிருத்தி அமைச்சின் கீழும், 2010 ஆம் ஆண்டு மதல் இதுவரைகாலம் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார

அமைச்சின் கீழும் 2015 ஆம் ஆண்டிலிருந்து மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழும் இந்தத் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது.

## 1.2 மாகாண சபைகள் தாபிக்கப்பட்டமையும், திணைக்களத்தின் அதிகாரங்களும்.

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தடுப்பு இல்லங்கள், சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகள், நன்னடத்தை அலுவலகங்கள் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களின் நடவடிக்கைகள் நன்னடத்தை திணைக்களத்தின் கீழ் விஸ்தரிக்கப்பட்டதுடன், நாடு முழுவதும் உள்ளடங்கும் வகையில் உதவி ஆணையாளர்கள், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளருக்கு உதவுவதற்காக நியமனம் செய்யப்பட்டார்கள்.

1987 இல் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் அமுலுக்கு வந்ததையடுத்து, மேற்படி ஒழுங்கமைப்பு மாற்றமடைந்ததுடன், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவையானது, மாகாண சபைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்டது. அத்துடன் அதுவரை ஆணையாளருக்கு உதவுவதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த உதவி ஆணையாளர் பதவிகளும் ரத்துச் செய்யப்பட்டன. மாகாண சபைகளின் கீழ் மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர்கள் சகல மாகாணங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டார்கள் என்பதுடன், நன்னடத்தை அலுவலகங்கள் அவர்களின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன.

சிறுவர் உரிமைகள் பற்றிய பூகோளப் பிரகடனத்தில், இலங்கை 1991 ஆம் ஆண்டு கைச்சாத்திட்டதுடன், 1992 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டது. மேற்படி சிறுவர் உரிமைகள் பிரகடனத்தில் காணப்படுகின்ற யாப்புக்களை அமுல்படுத்த வேண்டியதன் தேவைக்காக 1999 ஆம் ஆண்டு திணைக்களத்தினால் தமது வெளிக்கள கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதை நோக்காகக் கொண்டு சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் எனும் புதிய பதவி உருவாக்கப்பட்டு அதற்கு அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள். தற்போது இவர்கள் நாடு முழுவதும் அமைந்துள்ள மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு சேவையாற்றி வருகின்றனர். இதனூடாக நன்னடத்தை விடயம் மற்றும் சிறுவர் பராமரிப்பு விடயத்திற்கு முன்னுரிமை வழங்கி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

## 1.3 எமது நோக்கு

சிறுவர்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட்டதும், அவர்கள் தொடர்பில் உணர்வுப்பூர்வமானதுமான சமூகம்

## 1.4 எமது செயற்பணி

தேசிய கொள்கைகள், சர்வதேச நியமங்களுக்கு அமைய அநாதைகள், கைவிடப்பட்ட மற்றும் அநாதரவான சிறுவர்களையும் சட்ட ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களையும் விசேடமாகக் கொண்டு சகல சிறுவர்களினது உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கு சமமான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தல்.

## 1.5 எமது பெறுமானங்கள்

- ❖ சிறுவர்களை அடிப்படையாகக் கொள்ளல்
- ❖ பாசம், கருணையை அடிப்படையாகக் கொள்ளல்
- ❖ ஒத்துழைப்பு அணுகுமுறை
- ❖ சிறந்த அர்ப்பணிப்பு
- ❖ நல்லிணக்கம்

## 1.6 எமது அர்ப்பணிப்பு

- ❖ சட்டத்துடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்தல்
- ❖ அநாதைகளான, கைவிடப்பட்ட மற்றும் அநாதரவான சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்
- ❖ சட்ட ரீதியான சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
- ❖ சிறுவர் உரிமைகளை மேம்படுத்துவதற்கும், உறுதி செய்வதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ❖ சம்பந்தப்பட்ட அமைச்சுக்களையும், மாகாண சபைகளையும் ஒருங்கிணைப்புச் செய்து அவர்களது சிபாரிசுகளின் அடிப்படையில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக தற்போது அமுலிலுள்ள சட்டங்களை தேசிய மற்றும் சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்புடையவாறு திருத்தியமைத்தல்.
- ❖ மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களங்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப அறிவையும், சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக் கொடுத்தல்.
- ❖ சட்டத்துடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- ❖ தற்போதுள்ள உள்ளக சொத்துக்கள் மற்றும் முகாமைத்துவ முறைகளை மேம்படுத்தல்.
- ❖ மக்களின் தேவைகளுக்கு திருப்திகரமானவாறு வினைத்திறன்மிக்க சேவையை ஆற்றல்
- ❖ வினைத்திறனுடன் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடியவாறான பதவியணியொன்றைப் பயிற்றுவித்தல்.

## 1.7 நிகழ்ச்சித்திட்டங்கள்

- மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்பு
- வெளிநாட்டு தத்தெடுத்தல்கள்
- சிறுவர்களின் கல்வி உரிமைகளை உறுதி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

    - செவண சரண பெற்றோர் பாதுகாவளர் திட்டத்தின் மூலம் அநாதரவான சிறுவர்களுக்குத் தேவையான நிவாரணங்களைச் செய்து கொடுத்தல்
    - நெனதிறிய புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிவாரணங்களை அமுல்படுத்தல்
    - கெப்பக்கரு தெகுரு பெற்றோர் பாதுகாவளர் உதவித் திட்டத்தின் கீழ் சிறுவர்களுக்கு கல்வி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- சிறுவர் உரிமைகளை உறுதி செய்வதற்கான சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை வலுவூட்டல்.
- சிறுவர்களின் பங்கேட்பு உரிமையை உறுதி செய்வதற்கான சிறுவர் கழகங்கள் மற்றும் சிறுவர் சபை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்
- ஆலோசனை அவசியமான, சட்டத்துடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள சிறுவர்களுக்காக பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவை தேசிய நிலையத்தை பேணிவருதல்

## 1.8 திணைக்கள ஒழுங்கமைப்பும், பதவியணியினரை ஈடுபடுத்தலும்

இலங்கை நிருவாக சேவைக்கு உரித்தான பிரதி மற்றும் உதவி ஆணையாளர்கள் இருவா், திணைக்களம்சாா் உதவி ஆணையாளா், கணக்காளர், சட்ட அலுவலர், நிர்வாக அலுவலர், நன்னடத்தை அலுவலர்கள் இருவர் மற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் இருநூற்று முப்பத்து இரண்டு பேரை உள்ளடக்கிய பதவியணியினரின் உதவியுடன் ஆணையாளர் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் செயற்பணிகளை நிறைவேற்றும் பொறுப்பைக் கொண்டுள்ளார்.

திணைக்கள ஒழுங்கமைப்புக்கு உரித்தான பிரிவுகளாவன:

1. தாபன மற்றும் நிர்வாகப் பிரிவு
2. கணக்குகள் பிரிவு
3. நன்னடத்தைப் பிரிவு
4. அபிவிருத்திப் பிரிவு
5. பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் தேசிய நிலையம்.

திணைக்களத்தின் சகல பதவியணியினரும் உச்சளவான அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். ஒட்டுமொத்த பதவியணி 487 பேரைக் கொண்டுள்ளதுடன், தற்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 447 பேரைக் கொண்டதாக இத்திணைக்களம் இயங்கி வருகின்றது.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| ஆணையாளர் (இ.நி.சே. I) | 01 | 01 |
| பிரதி / உதவி ஆணையாளர் (இ.நி.சே. II/III) | 02 | 01 |
| உதவி ஆணையாளர் (திணைக்களம்சார்) | 01 | - |
| கணக்காளர் | 01 | 01 |
| சட்ட அலுவலர் | 01 | - |
| நிர்வாக அலுவலர் | 01 | - |
| மொழிபெயர்ப்பாளர் | 02 | 01 |
| நன்னடத்தை அலுவலர் | 02 | 01 |
| புள்ளிவிபர அலுவலர் | 01 | 01 |
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் (CRPO) | 424 | 232 |
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் (CRPA) | | 168 |
| அபிவிருத்தி அலுவலர் (தலைமை அலுவலகம் . பரத்த) | 12 | 08 |
| உளவியல் ஆலோசகர் | 02 | - |
| தகவல் தொழில்நுட்பவியல் அலுவலர் | 01 | - |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | 14 | 14 |
| சுருக்கெழுத்தாளர் | 01 | 00 |
| முறைசாரா கல்வி ஆலோசகர் | 01 | 01 |
| உதவி வோர்டன் | 03 | 03 |
| சாரதி | 04 | 04 |
| அலுவலக சிற்றூழியர் சேவை | 10 | 08 |
| சமையற்காரர் | 02 | 02 |
| துப்பரவேட்பாட்டு தொழிலாளி | 01 | - |
| மொத்தம் | 487 | 447 |

# 2. தாபன மற்றும் நிருவாகப் பிரிவு

## 2.1 தாபன மற்றும் நிர்வாகப் பிரிவின் பிரதான செயற்பணி

திணைக்களத்தின் பதவியணியினர் தொடர்பான தாபன நடவடிக்கைகள்.

- நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் தொடர்பான புதிய பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்தல், இடமாற்றல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள்.
- திணைக்கள பதவியணியினரின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் தேர்ச்சி மட்டங்களை பரீட்சிப்பதற்கான பரீட்சைகளை நடாத்தல்.
- சகல பதவியணியினருக்கும் முறையான பயிற்சியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

திணைக்களத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும் போது உள்ளக பதவியணியினரின் அறிவை மென்மேலும் வளர்ப்பதற்கும், புதிய அபிவிருத்தி உபாயமுறைகளை அறிமுகம் செய்வதற்கும், புதிய பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் மற்றும் பதவியணியினருக்குத் தேவையான பயிற்சிகளையும், அறிவையும் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய,

- தாபன நடவடிக்கைகள் மற்றும் கணக்கு நடவடிக்கைகள் பற்றிய பயிற்சி நடவடிக்கைகளில் அலுவலா்கள் பதினாறு பேர் கலந்துகொண்டார்கள். இதற்காக ரூபா 171,500/- ஆன தொகை ஒதுக்கப்பட்டது.

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | செலவிடப்பட்ட தொகை |
|---|---|
| அலுவலக மற்றும் முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் | 12000.00 |
| ஊழியர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 132500.00 |
| தமழ் மொழிக் கற்கைப் பயிற்சிப் பாடநெறி | 10500.00 |
| கணினி மூலம் சம்பளம் தயார் செய்யும் பாடநெறி | 16500.00 |
| மொத்தம் | 171500.00 |

- திணைக்கள அலுவலர்களின் விடய ரீதியான அறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் அவர்களின் பட்டப் பின் படிப்பு மற்றும் டிப்ளோமா பாடநெறிக் கட்டணங்களில் 50% - 75 % வரையான தொகைகளைச் செலுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கன ரூபா 306,600/- ஆன தொகை ஒதுக்கப்பட்டது.

| பட்டம் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | செலவிடப்பட்ட தொகை |
|---|---|
| ஆலோசனை பற்றிய டிப்ளோமா பாடநெறி | 142100.00 |
| ஆங்கில மொழிக் கற்கைப் பயிற்சிப் பாடநெறி (Preliminary Level) | 17500.00 |
| சிறுவர் உரிமைகள் பற்றிய பட்டப் பின் டிப்ளோமா பாடநெறி | 56000.00 |
| சமூகவியல் டிப்ளோமா பாடநெறி | 16000.00 |
| ஆலோசனை பற்றிய பட்டப் பின் டிப்ளோமா பாடநெறி | 70000.00 |
| மொத்தம் | 306600.00 |

## 2.2 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும், ஆராய்ச்சிகளும்

### 2.2.1 வெளிக்கள அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

சிறுவர் துஷ்பிரயோக நிலைமைகளை குறைத்து சிறுவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்காக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்ச்சித்திட்டங்களை இலங்கைச் சிறுவர் பரம்பரையின் பாதுகாப்பு மற்றும் அரவணைப்பை உறுதி செய்வதற்காக அமுல்படுத்தும் போது அதற்குப் போதியளவு அறிவைக் கொண்டுள்ள அலுவலர்களை சேவையில் ஈடுபடுத்துவது அத்தியாவசியமான விடயமொன்றாகும். அதற்கமைய பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் மற்றும் உதவியாளர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அலுவலர்களுக்கு வெளிக்களத்தில் சிறுவர்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் காணப்படுகின்ற அறிவு போதியளவில் இல்லாமை, மனப்பாங்கு, விளைதிறன்மிக்கவாறு வழிநடாத்தும் பொருட்டு பயிற்சிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல்வேண்டும். அதற்காக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் தேசிய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினால் 2017 ஆம் ஆண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்பட்டன.

செலவுத் தலைப்பு - 217-2-2-2401

அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் - ரூபா 700,000.00

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பங்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கை | நடாத்தப்பட்ட திகதி | செலவு ரூ. | விடயத் தலைப்பு |
|---|---|---|---|---|
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவி அலுவலர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 24 | 2017.04.24 - 26 | 115286.00 | • புதிய இளம்பராய சிறுவர்களின் வாழ்க்கைத் திறன்கள்<br>• சிறுவர் உரிமைகள் சமவாயம்<br>• சிறுவர்களுடன் அழகியற்கலை செயற்பாடுகளை பயன்படுத்தல்<br>• சமூக வேலைகள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல் |
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவி அலுவலர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தமிழ் மொழி மூலம்) | 28 | 2017.07.11 - 13 | 131035.00 | • புதிய இளம்பராய சிறுவர்களின் வாழ்க்கைத் திறன்கள்<br>• சிறுவர் உரிமைகள் சமவாயம்<br>• சிறுவர்களுடன் அழகியற்கலை செயற்பாடுகளை பயன்படுத்தல்<br>• சமூக வேலைகள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல் |
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவி அலுவலர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 21 | 2017.07.25 – 27 | 98780.00 | • புதிய இளம்பராய சிறுவர்களின் வாழ்க்கைத் திறன்கள்<br>• சிறுவர் உரிமைகள் சமவாயம்<br>• சிறுவர்களுடன் அழகியற்கலை செயற்பாடுகளை பயன்படுத்தல்<br>• சமூக வேலைகள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல் |
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவி அலுவலர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 22 | 2017.08.23 – 25 | 103917.00 | • புதிய இளம்பராய சிறுவர்களின் வாழ்க்கைத் திறன்கள்<br>• சிறுவர் உரிமைகள் சமவாயம்<br>• சிறுவர்களுடன் அழகியற்கலை செயற்பாடுகளை பயன்படுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | • சமூக வேலைகள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல் |
| சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் தொகுப்புச் சம்மேளனம் | 290 | 2017.12.08 | 203250.00 | • புதிய இளம்பராய சிறுவர்களின் வாழ்க்கைத் திறன்கள்<br>• சிறுவர் உரிமைகள் சமவாயம்<br>• சிறுவர்களுடன் அழகியற்கலை செயற்பாடுகளை பயன்படுத்தல்<br>• சமூக வேலைகள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல் |

சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் வளவாளர் குழுமம்

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | நடாத்தப்பட்ட திகதி | செலவு ரூ. | விடயத் தலைப்பு |
|---|---|---|---|---|
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் வளவாளர் குழுமம் (சிங்கள மொழி மூலம்) | 40 | 2017.06.13 - 16 | SDFL நிறுவனம் | 360775.00 |
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் வளவாளர் குழுமம் (தமிழ் மொழி மூலம்) | 16 | 2017.10.09 - 12 | NTRC நிறுவனம் | 3080034.00 |

# 3. கணக்குகள் பிரிவு

திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான நிதி ஏற்பாடுகள் வருடாந்தம் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டு செலவுத் தலைப்பு இலக்கம் 217 இன் கீழ் சமூக பாதுகாப்பு எனும் பிரிவின் கீழ் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

இந்த ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொடுக்கும் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்படுகின்றன.

1. செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

2. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

ஏற்பாடுகள் பற்றிய பொழிப்பு பின்வருமாறாகும்.

## 3.1 நிதிசார் முன்னேற்றம்

| நிகழ்ச்சித்திட்ட அடிப்படையிலான ஏற்பாடுகள் /செலவின பொழிப்பு | | | | |
|---|---|---|---|---|
| 01. செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டக் கருத்திட்ட இல. 01 நிருவாகம் மற்றும் தாபனச் சேவைகள் | 1. மீண்டெழும் செலவினம்<br>2. மூலதனச் செலவினம் | ஏற்பாடுகள் ரூ. | செலவினம் ரூ. | % |
| | 1. மீண்டெழும் செலவினம் | 35,187700.00 | 33,474,416.00 | 95% |
| | 2. மூலதனச் செலவினம் | 850,000.00 | 653,100.00 | 76% |
| | மொத்தம் | 36,037,700.00 | 34,127,516.00 | |
| 02. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டக் கருத்திட்ட இல. 02 நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் | 1. மீண்டெழும் செலவினம்<br>2. மூலதனச் செலவினம் | **ஏற்பாடுகள் ரூ.** | **செலவினம் ரூ.** | |
| | 1. மீண்டெழும் செலவினம் | 255,875,000.00 | 252,475,404.00 | 98% |
| | 2. மூலதனச் செலவினம் | 17,750,000.00 | 16,730,947.00 | 94% |
| | மொத்தம் | 273,625,000.00 | 269,206,351.00 | |

| மூலதன செலவின ஏற்பாடுகள் /செலவின பொழிப்பு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | திறன் விருத்தி | | | சிறுவர் இல்லங்களை புனரமைத்தல் / சிறுவர் இல்லங்களை கண்காணிப்பு செய்தல் | | |
| 01. செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டக் கருத்திட்ட இல. 01 நிருவாகம் மற்றும் தாபனச் சேவைகள் | ஏற்பாடுகள் ரூ. | செலவினம் ரூ. | % | ஏற்பாடுகள் ரூ. | செலவினம் ரூ. | % |
| | 200,000.00 | 171,500.00 | 85% | --- | --- | - |
| 02. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டக் கருத்திட்ட இல. 02 நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் | 1,000,000.00 | 927,287.00 | 92% | 15,000,000.00 | 14,414,198.00 | 96 |
| மொத்தம் | 1,200,000.00 | 1,098,787.00 | | 15,000,000.00 | 14,414,198.00 | |
| | | | | | | |

| மூலதன செலவின ஏற்பாடுகள் /செலவின பொழிப்பு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மூலதன சொத்துக்களை புனரமைத்தலும், மேம்படுத்தலும் | | | மூலதன சொத்துக் கொள்வனவு | | |
| 01. செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டக் கருத்திட்ட இல. 01 நிருவாகம் மற்றும் தாபனச் சேவைகள் | ஏற்பாடுகள் ரூ. | செலவினம் ரூ. | % | ஏற்பாடுகள் ரூ. | செலவினம் ரூ. | % |
| | 250,000.00 | 118,200.00 | 47% | 400,000.00 | 363,400.00 | 90% |
| 02. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டக் கருத்திட்ட இல. 02 நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் | 750,000.00 | 428,650.00 | 79% | 1,000,000.00 | 960,813.00 | 93% |
| மொத்தம் | 1,000,000.00 | 546,850.00 | | 1,400,000.00 | 1,324,213.00 | |

## 3.2 கணக்காய்வு அவதானிப்பு

நிதி நிருவாகத்தின் போதியளவிலான தன்மையை உறுதி செய்யும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணத் தொகுப்பின் நிதிப் பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நன்னடத்தை மற்றும் சிறுவர் பராரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் பிரதம கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் தமது கணக்கீட்டு நடவடிக்கைகள் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

# 4. நன்னடத்தை நடவடிக்கைகள்

## 4.1 அறிமுகம்

நன்னடத்தைச் சேவை என்பதன் மூலம் கருதப்படுவது நிறுவனமயப்படுத்தல், சிறைப்படுத்தல், வேறு நிதிசார் அபராதம் அல்லது வேறு தண்டனைக்கு உட்படுத்தாது குற்றவாளி ஒருவருக்கு புனர்வாழ்வு அளிப்பதாகும். இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது, உரிய நபர் வாழும் சூழலிலேயே இருப்பதற்கு இடமளித்து நன்னடத்தை அலுவலர்களின் கண்காணிப்பின் கீழ் அவர் சமூக விரோதச் செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்து புதியதொரு வாழ்க்கையைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.

1944 இன் 42 ஆம் இலக்க குற்றவாளிகளை நன்னடத்தையின் பொறுப்பில் வைத்திருப்பதற்கான கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவுக்கு அமைய யாதாயினுமொரு தவறின் தன்மைக்கு அமையவும், குற்றவாளியின் வயது, பால் மற்றும் அவரின் அந்தஸ்து ஆகிய விடயங்களும் நீதிமன்றத்தினால் கவனத்தில் கொள்ளப்பட்டு எந்தவொரு நபரும் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் அவரின் விருப்பத்துடன், எந்தவொரு தவறு தொடர்பாகவும் நன்னடத்தை உத்தரவொன்றைப் பிறப்பிக்க முடியும்.

இவ்வாறு நன்னடத்தையின் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் குற்றவாளிக்கு பொருளாதார மற்றும் சமூக ரீதியல் பயன்கள் கிடைப்பதுடன், இது முழுச் சமுதாயத்திற்கும் பயன்களைப் பெற்றுக் கொடுப்பதாக இருக்கும். உதாரணமாக யாராயினும் ஆளொருவர் ஏதேனும் குற்றச் செயலை மேற்கொண்டதை அடுத்து, அவர் சிறை அல்லது வேறு தண்டனைக்கு உட்படுத்தப்படுவார் எனின், இது அவரின் குடும்பத்திற்கு பொருளாதார ரீதியாகவும், சமூக அடிப்படையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அவ்வாறே நாட்டுக்கும் அவ்வாறான ஆட்களைப் பராமரிப்புச் செய்வதற்காக அதிக நிதியைச் செலவிட வேண்டி ஏற்படுகின்றது. எனினும குறித் நபரை, அவர் வாழும் சூழலில் வைத்திருந்து அவரின் அன்றாட வாழ்க்கையை நல்லமுறையில் நடாத்திச் செல்வதற்கான அறிவுரைகள் நன்னடத்தைச் சேவையிலிருந்து கிடைக்கும். எனவே இந்த நன்னடத்தைச் சேவையை சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளித்தல் செயற்பாடாக முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அமைய நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் விடயம் மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள போதிலும் சிறுவர் உரிமைகள் பிரகடனத்தை அமுல்படுத்தும் பொறுப்பு மத்திய அரசின் கிழ் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. எனவே நன்னடத்தைச் சேவை பன்முகப்படுத்தப்பட வேண்டுமாயினும், கொள்கைகள், சட்டங்களைத் திருத்தியமைப்பது மத்திய அரசாங்கத் திணைக்களத்தின் செயற்பணியாகும். அதற்கமைய மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களங்களை ஒருங்கிணைப்புச் செய்து நன்னடத்தைச் சேவையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. திணைக்களத்தின் செயல்ரீதியான திட்டத்தின் கீழ் மாகாண திணைக்களங்களுக்கு நிதி ஏற்பாடுகளை ஒதுக்குவதும், அதன் முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 4.2 தத்தெடுத்தல்

1941 இன் 24 ஆம் இலக்க தத்தெடுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தத்தெடுப்பதற்கு உத்தேசிக்கின்ற சிறுவர்களின் சட்டபூர்வமான பாதுகாவளராக செயற்படுகின்ற பொறுப்பு திணைக்களத்திற்கு அளிக்கப்படுகின்றது. இந்த செயற்பணி உள்நாடு மற்றும் வெளிநாடு என்ற வகையில் இரண்டாக வகுக்கப்படுகின்றது. இவற்றில் உள்நாட்டு தத்தெடுக்கும் நடவடிக்கைகள் மாகாண ஆணையாளரினால் மேற்கொள்ளப்படுவதுடன், வெளிநாட்டு தத்தெடுக்கும் நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் பிறந்துள்ளதுடன், தற்போது பல்வேறு நாடுகளில் பிரசாவுரிமையை பெற்றுள்ளவர்கள், இலங்கை மற்றும் வெளிநாடுகளுக்கான இரட்டைப் பிரசாவுரிமையைப் பெற்றுள்ளவர்கள் மற்றும் தற்காலிகமாக வெளிநாடுகளில் வாழ்ந்து வருவோரும், சிறுவர்களை தத்தெடுப்பதற்கான தமது விண்ணப்பப் படிவங்களை மத்திய அரசின் இந்தத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கின்றார்கள். மேற்படி விண்ணப்பதாரர்கள் சிறுவர்களை நாட்டுக்கு வெளியே கொண்டு செல்வதன் காரணமாக அவர்கள் வெளிநாடுகளுக்கு தத்தெடுப்பது தொடர்பான சட்டங்களைப் பின்பற்ற வேண்டும்.

மேலும் வெளிநாடுகளில் வாழும் ஒருசில விண்ணப்பதாரர்கள் தமது குடும்பத்தின் உறவினர்களது பிள்ளைகளை தத்தெடுக்க முன்வருகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளதுடன், அவர்களும் வெளிநாடுகளுக்கு தத்தெடுப்பது தொடர்பான சட்டங்களைப் பின்பற்ற வேண்டி ஏற்படுகின்றது. மேலும் வெளிநாட்டவர்களும், இலங்கைப் பிள்ளைகளை தத்தெடுப்பதற்கான தமது விண்ணப்பப்படிவங்களை நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கின்றனர். சர்ததேச ஹேக் பிரகடனம் மற்றும் சிறுவர்களை தத்தெடுப்பதற்கான கட்டளைச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் மேற்படி விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்நாட்டு விண்ணப்பதாரர்கள் இல்லாத சிறுவர்கள் வெளிநாட்டு தத்தெடுப்பதற்கு வழங்கப்படுகின்றனர்.

## 4.3 வெளிநாடுகளுக்கு தத்தெடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை - 2017

| இல. | நாடு | வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் தத்தெடுத்துள்ள சிறுவர்களின் எண்ணிக்கை | வெளிநாட்டுத் தத்தெடுத்தல் | தத்தெடுப்பதற்காக வழங்கப்பட்ட சிறுவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | ஜேர்மனி | - | 04 | 04 |
| 02 | கனடா | 01 | - | 01 |
| 03 | பிரான்ஸ் | - | 02 | 02 |
| 04 | ஐக்கிய இராச்சியம் | 03 | - | 03 |
| 05 | நெதர்லாந்து | - | 01 | 01 |
| | மொத்தம் | 04 | 07 | 11 |

# 5. அபிவிருத்திப் பிரிவின் நடவடிக்கைகள்

## 5.1 அறிமுகம்

சிறுவர்கள் தொடர்பில் விசேட பாதுகாப்பை விஸ்தரிக்க வேண்டியதன் அவசியத்தன்மை

- 1924 சிறுவர் உரிமைகள் பற்றிய ஜினீவா பிரகடனத்திலும்,
- 1959 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் பிரகடனத்திலும்,
- 1976 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையிலும்,
- 1976 பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையிலும்,
- 1991 சிறுவர் உரிமைகள் பற்றிய உலக சமவாயத்திலும்,

சிறுவர்களின் நலன்புரி தொடர்பில் கவனம் செலுத்துகின்ற விசேட இணை முகவராண்மை நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் யாப்புக்கள் மற்றும் குறித்த ஆவணங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்திலும், குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கையில் சிறுவர் உரிமைகளை ஏற்றுக் கொள்கின்ற சட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதனால் இலங்கை அரசாங்கத்தினால் சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த பிரகடனத்தின் ஏற்பாடுகளை உள்ளடக்கும் வகையில் திணைக்களம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளை அமுல்படுத்தியுள்ளது.

1. வாழ்வதற்கும், அபிவிருத்திக்குமுள்ள உரிமைகளை உறுதி செய்வதன் கீழ் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- செவண சரண பெற்றோர் பாதுகாவளர் திட்டம்
- கல்வி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்
- கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் திட்டம்
- நெனதிறிய கல்வி உதவி வழங்குதல்
- திடீர் அனர்த்தம் / மருத்துவ உதவி / இரட்டைக் குழந்தைகளுக்கு உதவும் திட்டம்.
- சௌஹச உதவித் திட்டம்

2. சிறுவர்களின் பங்கேட்பை உறுதி செய்வதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- சிறுவர் கழகங்களையும், சிறுவர் சபைகளையும் தாபித்தல்
- உலக சிறுவர் தின நிகழ்ச்சித்திட்டங்கள்

3. சமுதாய அடிப்படையிலான சிறுவர் பாதுகாப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- மாதிரிக் கிராமம், நலன்புரிக் கிராமம் மற்றும் சமுதாய அடிப்படையிலான கிராமங்களைத் தாபித்தல்
- சிறுவர் உரிமைகள் பிரகடனம் பற்றிய நடவடிக்கைக் குழுக் கூட்டத்தை நடாத்தல்
- அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்

4. மாற்றுப் பாதுகாப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்தல்
- நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களுக்கு தொழில் பயிற்சி அளித்தல்
- நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

## 5.2 சிறுவர்களின் சமூகப் பாதுகாப்புக்கான செயற்றிட்டம் - 2017 - 2018

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, சேவ் த சில்ரன் (Save the Children ) நிறுவனத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ் இந்தக் கருத்திட்டத்தை அமுல்படுத்துகின்றது. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் சிறுவர் செயலகத்துடன் இணைந்து சிறுவர்களின் சமூக பாதுகாப்புக்கான கருத்திட்டத்திட்டத்தின் பணிகளை அமுல்படுத்தும் பொறுப்புக் கையளிக்கப்பட்டுள்ளது.

சேவ் த சில்ரன் நிறுவனம் பிரதானமாக 4 துறைகளின் ஊடாக சிறுவர்களின் பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் பங்கேட்பு ஆகிய உரிமைகளை இலங்கைச் சமூகத்தில் வலுவூட்டுவதற்காக இந்தக் கருத்திட்டத்தின் மூலம் நிதிசார் பங்களிப்பை வழங்கிவருகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்கு விசேட பொறுப்பொன்று 2017 ஆம் ஆண்டு கையளிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் இந்தத் திணைக்களத்திற்கு ரூ.மி. 97.22 ஆன

ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட இந்த ஏற்பாட்டுத் தொகை பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

அச்சுறுத்தலான நிலைமையிலுள்ள சிறுவர்களுக்கு பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வதன் மூலம் மேற்படி சிறுவர்களை அச்சுறுத்தலான நிலைமைகளிலிருந்து தடுத்து அவர்களின் பாதுகாப்பு பற்றிய அபிவிருத்தியை உறுதிசெய்தல், இனங்காணப்படுகின்ற விசேடமான சிக்கல்களுக்கு ஆராய்ச்சிகளை நடாத்துவது இதன் கீழ் தாய்மார் வெளிநாடு சென்றுள்ளமை சிறுவர்களின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பில் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் பற்றியும், சிறுவர்களின் பங்கேட்பு உரிமையை உறுதி செய்வதற்காக உருவாக்கப்பட்ட சிறுவர் கழகங்கள் மற்றும் சிறுவர் சபைகள் பற்றியும் 02 ஆய்வுகள் நடாத்தப்பட்டன.

சிறுவர்களின் பாதுபாப்பை வலுவூட்டுவதற்காக சமூகக் கட்டமைப்புக்களை வலுவூட்டுவதற்கு கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்களுக்கான வழிகாட்டல் தொகுப்பு அச்சிடப்பட்டு இலங்கை முழுவதிலும் விநியோகிக்கப்பட்டு குழு அங்கத்தவர்களை பயிற்றுவிப்பது இடம்பெற்றுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக சம்பவ முகாமைத்துவக் கொள்கையைத் தயார் செய்வது ஆரம்பிக்கப்பட்டதுடன், இது தற்போது இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது.

சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் உரிமைகளை பிரபல்யப்படுத்துவதற்காக தேசிய மட்டத்தில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வீடியோ ஒளிப்படமொன்றைத் தயார் செய்வதும் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுவர்களின் சமூக பாதுகாப்புக்கான செயற்றிட்டத்தின் மூலம் இலங்கை சிறுவர்களின் பாதுகாப்பை அபிவிருத்தி செய்வதற்காக அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் சிறுவர்களுக்கு மிகவும் பொருத்தமானதொரு சமூக சூழலை உருவாக்குவதற்கு விசேட பங்களிப்பை வழங்குகின்றது என்பது மிகவும் தெளிவான விடயமாகும்.

## 5.3 செவண சரண பெற்றோர் பாதுகாவளர் திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பொருளாதார ரீதியில் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் கல்வி பயிலும் சிறுவர்களுக்கு கற்கைத் தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தேவைகளுக்கு ஏற்றவாறு மாதாந்த புலமைப் பரிசில் வழங்கப்படும். இதற்கான நிதிப் பங்களிப்பு கெப்பகரு பெற்றோர் ஊடாகப் பெற்றுக் கொடுக்கப்படும்.

| ஆண்டு | நிகழ்ச்சித்திட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|---|
| 2017 | செவண சரண கல்வி புலமைப் பரிசில் திட்டம் | 75 | 1.6 |

## 5.4 சிறுவர்களின் கல்வி உரிமையை உறுதி செய்வதற்காக கல்வி உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்

ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி கற்கும் உரிமை உள்ளதுடன் சிறுவர் அபிவிருத்தியில் இது மிகவும் முக்கியமான காரணியொன்றாகும். சிறுவர் பராயத்தில் கல்வி கற்கும் வாய்ப்பு இழக்கப்பட்டால் சிறுவர்களின் எதிர்காலம் இருள்மிக்கதாக மாறலாம். இலங்கையில் கல்வியை இடைநடுவே கைவிடுகின்ற சிறுவர்கள் காரணமாக சிறுவர் ஊழியர்கள், சிறுவயது தாய்மார் உருவாகுதல் மற்றும் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு சிறுவர்கள் உள்ளாகும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. பெற்றோரை இழப்பது, பெற்றோரின் அறிவீனம், கவனயீனம், தாய் வெளிநாடு செல்லல், பொருளாதார க்'டங்கள் போன்ற பல்வேறு காரணங்களினால் சிறுவர்கள் இடைநடுவே பாடசாலைக் கல்வியை கைவிட நேரிடுகின்றது.

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் இலங்கைச் சிறுவர்களின் கல்வி உரிமையை உறுதி செய்வதன் மூலம் தார்மீகமான சிறுவர் பரம்பரையொன்றை உருவாக்குவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இங்கு இரண்டு அணுகுமுறைகளின் கீழ் சிறுவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. அவையாவன,

- பாடசாலைக் கல்வியைப் பெறுகின்ற வயதிலுள்ள போதிலும் பொருளாதார க்'டங்கள் காரணமாக இடைநடுவே கல்வியைக் கைவிட்டுள்ள சிறுவர்கள்.
- பல்வேறு காரணங்களினால் விட்டு விட்டுப் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள்.

பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இனங்கண்டு அவர்கள் பாடசாலைக்குச் செல்லாமைக்கான காரணங்கள் பற்றி ஆராய்ந்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு பாடசாலைமயப்படுத்தலும், கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளவாறு தோட்டப்புற சிறுவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதும் இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் பல கட்டங்களாக அமுல்படுத்தப்பட்டது.

- பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்து அவர்களை வலுவூட்டல்.
- கல்வியறிவூட்டுவதன் முக்கியத்துவம் பற்றி சிறுவர்கள், ஆசிரியர்கள், பெற்றோருக்கு அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்.
- அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், அலுவலர்களுக்கு மத்தியில் சிறுவர்களுக்கு நன்மைவிளையும் வகையில் நல்லதொரு ஒருங்கிணைப்பைக் கட்டியெழுப்புதல்.

பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.


## 5.5 கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் நிகழ்ச்சித்திட்டம்

தொடர்ந்தும் சிறுவர்களின் கல்வித் தேவைகளுக்கு உத்துழைப்பு வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டமாக கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகம் செய்ய முடியும். இது மாதாந்தம் வழங்கப்படுகின்ற கல்விப் புலமைப் பரிசில் திட்டமாக செயற்படுத்தப்பட்டுள்ளது. விசேட கல்விசார் திறமைகளைக் கொண்டுள்ள பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்ற பாடசாலை மாணவர்கள் இதன் இலக்குக் குழுக்களாவார்கள். இவர்களிலிருந்து பொருத்தமானவர்களை தெரிவு செய்து அனுப்புவதை சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் மேற்கொள்வார்கள். மாதாந்தம் ஒரு பிள்ளைக்கு ரூபா 500/- அல்லது ரூபா 750/-இனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**2017 ஆம் ஆண்டில் கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் புலமைப்பரிசில் வழங்கல்**

| | மாவட்டம் | சிறுவர்கள் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| **1.** | கொழும்பு | 79 | 474000.00 |
| **2.** | கம்பஹா | 96 | 549000.00 |
| **3.** | களுத்துறை | 82 | 471000.00 |
| **4.** | காலி | 126 | 747000.00 |
| **5.** | மாத்தறை | 105 | 756000.00 |
| **6.** | ஹம்பாந்தோட்டை | 119 | 672000.00 |
| **7.** | கண்டி | 165 | 942000.00 |
| **8.** | மாத்தளை | 63 | 390000.00 |
| **9.** | நுவரெலியா | 17 | 120000.00 |
| **10.** | அநுராதபுரம் | 151 | 912000.00 |
| **11.** | பொலன்னறுவை | 12 | 81000.00 |
| **12.** | மொனராகலை | 82 | 438000.00 |
| **13.** | பதுளை | 143 | 807000.00 |
| **14.** | குருநாகல் | 202 | 1203000.00 |
| **15.** | புத்தளம் | 52 | 300000.00 |

| | | | |
|---|---|---|---|
| **16.** | கேகாலை | 97 | 540000.00 |
| **17.** | இரத்தினபுரி | 93 | 546000.00 |
| **18.** | முல்லைத்தீவு | 01 | 6000.00 |
| **19.** | திருகோணமலை | 12 | 72000.00 |
| **20.** | மன்னார் | 02 | 12000.00 |
| **21.** | மட்டக்களப்பு | 28 | 159000.00 |
| **22.** | வவுனியா | 01 | 12000.00 |
| **23.** | கிளிநொச்சி | 01 | 6000.00 |
| **24.** | அம்பாறை | 15 | 147000.00 |
| **25.** | யாழ்ப்பாணம் | 96 | 543000.00 |
| | மொத்தம் | 1840 | 10845000.00 |



## 5.6 நெனதிறிய கல்விப் புலமைப் பரிசில் திட்டம்

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கல்வியை இழக்கும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களுக்கு இந்தத் திணைக்களத்தின் முகாமைத்துவ சபையினால் நெனதிறிய நிகழ்ச்சித்திட்டம் மூலம் தனியார் துறையின் நிதி உதவியுடன் மாதாந்தம் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் செவண சரண கெப்பகரு பெற்றோர் பாதுகாவளர் திட்டத்தின் கீழ் உப கருத்திட்டமொன்றாக அமுல்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் ஒரு பிள்ளைக்கு 1000 ரூபா முதல் 2000 ரூபா வரையான உதவித் தொகை வழங்கப்படுவதுடன், இத்தொகை அனுசரணையாளரின் விருப்பத்திற்கு அமைய வழங்கப்படுகின்றது.

**நெனதிறிய கல்விப் புலமைப் பரிசில் உதவிகளைச் செலுத்தல்**

| ஆண்டு | நிகழ்ச்சித்திட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|---|
| 2017 | நெனதிறிய கல்வி உதவி நிகழ்ச்சித்திட்டம் | 550 | 6.6 |


## 5.7 இரட்டைக் குழந்தைகளுக்கான உதவி

குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள இரட்டைக் குழுந்தைகளின் சுகாதாரம், போசனை, ஏனைய நலன்புரி நடவடிக்கைகளுக்கும், மேற்படி சிறுவர்களை அச்சுறுத்தலான நிலைமைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குமாக வழங்கப்படுகின்ற உதவித்திட்டமொன்றாகும். பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்களுக்குத் தேவையான நிதி உதவிகள் இதன் மூலம் பெற்றுக் கொடுக்கப்படும்.

இதன் கீழ் இரண்டு குழந்தைகளுக்கு ரூபா 7,500/- உம், மூன்று குழந்தைகளுக்கு ரூபா 15,000/- உம், நான்கு குழந்தைகளுக்கு ரூபா 20,000/- உம், ஐந்து குழந்தைகளுக்கு ரூபா 25,000/- உம் செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் இந்த உதவித் திட்டத்தின் கீழ் பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கமைய ஒரு வருடத்திற்கு 500 குடும்பங்களுக்கும் மேற்பட்டவர்களுக்கு இதன் மூலம் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

| தொடர் இல. | மாவட்டம் | சிறுவர்களின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | 05 | 20000.00 |
| 02 | கம்பஹா | 10 | 37500.00 |
| 03 | மாத்தறை | 13 | 52500.00 |
| 04 | காலி | 08 | 30000.00 |
| 05 | ஹம்பாந்தோட்டை | 11 | 45000.00 |
| 06 | கண்டி | 15 | 70500.00 |
| 07 | மாத்தளை | 11 | 45000.00 |
| 08 | நுவரெலியா | 10 | 37500.00 |
| 09 | அநுராதபுரம் | 06 | 22500.00 |
| 10 | பொலன்னறுவை | 02 | 7500.00 |
| 11 | மொனராகலை | 11 | 45000.00 |
| 12 | பதுளை | 11 | 45000.00 |
| 13 | குருநாகல் | 21 | 82500.00 |
| 14 | புத்தளம் | 09 | 37500.00 |
| 15 | கேகாலை | 12 | 45000.00 |
| 16 | இரத்தினபுரி | 14 | 52500.00 |
| 17 | முல்லைத்தீவு | 04 | 15000.00 |
| 18 | திருகோணமலை | 06 | 22500.00 |
| 19 | மட்டக்களப்பு | 14 | 52500.00 |
| 20 | வவுனியா | 02 | 7500.00 |
| 21 | அம்பாறை | 16 | 60000.00 |
| 22 | யாழ்ப்பாணம் | 14 | 52500.00 |
| 23 | மன்னார் | 02 | 7500.00 |
| | மொத்தம் | 227 | 893000 |




## 5.8 மருத்துவ உதவி


குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள சிறுவர்களின் சுகாதார, போசனைச் சிக்கல்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்த உதவித் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வலது குறைந்த சிறுவர்களுக்கும் இதன் மூலம் உதவி வழங்கப்படுகின்றது. அவ்வாறே வலதுகுறைந்த சிறுவர்களுக்கும் இதன் கீழ் உதவி வழங்கப்படுகின்றது. பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கிடைக்கின்ற விண்ணப்பங்களுக்கு அமைய தேவையான நிதி பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

இதன் கீழ் மருத்துவ சிகிச்சை, சத்திர சிகிச்சை, போசனை நடவடிக்கைகள், உடல் ரீதியான பலவீனங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் உபகரணங்களுக்கும் உதவி வழங்கப்படுகின்றது. சிகிச்சை, போசனை நடவடிக்கைகளுக்காக ரூபா 5,000/- ஆன தொகையும், சத்திர சிகிச்சைகளுக்காக ரூபா 10,000/- ஆன தொகையும், உபகரணங்களுக்காக அவற்றின் விலைகளுக்கு அமைய பல்வேறு தொகைகளும் செலுத்தப்படுகின்றது. இந்தக் கொடுப்பனவுத் தொகைகள் அக்குழந்தைகளின் குடும்பங்களது பல்வேறு நிலைமைகள், அவர்கள் எதிர்நோக்கியுள்ள அசௌகரிங்களின் அடிப்படையில் மாற்றமடைய முடியும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் இந்த உதவித் திட்டத்தின் கீழ் பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கமைய வருடாந்தம் சுமார் 500 குடும்பங்களுக்கு இதன் மூலம் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

**2017 ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் மருத்துவ உதவி செலுத்தப்பட்ட முறை**

| தொடர் இல. | மாவட்டம் | தொகை ரூ. | சிறுவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கொழும்பு | 25000.00 | 04 |
| 2 | கம்பஹா | 66000.00 | 11 |
| 3 | களுத்துறை | 30000.00 | 05 |
| 4 | காலி | 30000.00 | 05 |
| 5 | மாத்தறை | 55000.00 | 8 |
| 6 | ஹம்பாந்தோட்டை | 20000.00 | 3 |
| 7 | கண்டி | 40000.00 | 8 |
| 8 | மாத்தளை | 55000.00 | 09 |
| 9 | நுவரெலியா | 40000.00 | 08 |
| 10 | அநுராதபுரம் | 50000.00 | 11 |
| 11 | பொலன்னறுவை | 20000.00 | 04 |
| 12 | மொனராகலை | 22500.00 | 03 |
| 13 | பதுளை | 30000.00 | 06 |
| 14 | குருநாகல் | 95000.00 | 16 |
| 15 | புத்தளம் | 10000.00 | 02 |
| 16 | கேகாலை | 20000.00 | 04 |
| 17 | இரத்தினபுரி | 45000.00 | 07 |
| 18 | முல்லைத்தீவு | 0 | 00 |
| 19 | திருகோணமலை | 70000.00 | 16 |
| 20 | மன்னார் | 20000.00 | 32 |
| 21 | மட்டக்களப்பு | 50000.00 | 25 |
| 22 | வவுனியா | 5000.00 | 1 |
| 23 | கிளிநொச்சி | 0 | 0 |
| 24 | அம்பாரை | 45000.00 | 08 |
| 25 | யாழ்ப்பாணம் | 75000.00 | 15 |
| | மொத்தம் | 918500.00 | 167 |



## 5.9 திடீர் அனர்த்த உதவி


திடீரென ஏற்படுகின்ற அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்ற குடும்பங்களின் அநாதரவான சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு வழங்கப்படுகின்ற உதவித் திட்டமொன்றாகும். திடீரென சூழலில் ஏற்படுகின்ற வெள்ளம், சூறாவளி, மண்சரிவு, வீடுகள் தீயில் எரிதல் போன்ற நிலைமைகளினால் கஷ்டங்களை எதிர்நோக்குகின்ற சிறுவர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள் இதன் மூலம் செய்து கொடுக்கப்படும். அத்துடன் குடும்பங்களில் பெற்றோர் உயிரிழத்தல், சிறுவர்களை கைவிட்டுச் செல்லல், பெற்றோர் திடீர் விபத்துக்களுக்கும், நோய்களுக்கும் ஆளாகுதல், வெளிநாடு சென்றவர்கள் திரும்பி வராமை, சிறுவர்கள் தற்காலிக பாதுகாவளர்களின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்படுதல், குறித்த பாதுகாவளர்கள் உடல், உள ரீதியில் பலவீனமானவர்களாக இருத்தல் போன்ற காரணங்களினால் அநாதரவான நிலைக்குத் தள்ளப்படுகின்ற சிறுவர்களுக்கு உதவுவதற்கும் இந்த உதவித் திட்டத்தின் கீழ் வசதி செய்யப்படும்.

யாதாயினுமொரு அனர்த்த நிலைமையின் போது சிறுவர்களின் பாடசாலை உபகரணங்கள் சேதமடைந்திருப்பின் அதற்குப் பதிலாக ஒரு குடும்பத்திற்கு ரூபா 5000/- ஆன உதவித் தொகை வழங்கப்படும். அவ்வாறாயினும், அவ்வவ் சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற இழப்புக்களின் தீவிரத்தன்மையின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற உதவித் தொகை மாற்றமடைய முடியும். யாதாயினுமொரு அனர்த்த நிலைமையின் போது சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியளிப்பது இதன் பிரதான நோக்கமாகும். பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு அமைய தேவையான நிதிஉதவி பெற்றுக் கொடுக்கப்படும்.

**2017 ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் திடீர் அனத்த உதவி செலுத்தப்பட்ட முறை**

| தொடர் இல. | மாவட்டம் | தொகை ரூ. | சிறுவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கொழும்பு | 58990.00 | 37 |
| 2 | கம்பஹா | 0 | 0 |
| 3 | களுத்துறை | 9510.00 | 1 |
| 4 | காலி | 0 | 0 |
| 5 | மாத்தறை | 15000.00 | 1 |
| 6 | ஹம்பாந்தோட்டை | 10000.00 | 2 |
| 7 | கண்டி | 20000.00 | 3 |
| 8 | மாத்தளை | 10000.00 | 2 |
| 9 | நுவரெலியா | 5000.00 | 1 |
| 10 | அநுராதபுரம் | 10000.00 | 1 |
| 11 | பொலன்னறுவை | 12000.00 | 2 |
| 12 | மொனராகலை | 0 | 0 |
| 13 | பதுளை | 80000.00 | 2 |
| 14 | குருநாகல் | 10000.00 | 2 |
| 15 | புத்தளம் | 12000.00 | 2 |
| 16 | கேகாலை | 0 | 0 |
| 17 | இரத்தினபுரி | 15000 | 3 |

| | | | |
|---|---|---|---|
| **18** | முல்லைத்தீவு | 0 | 0 |
| **19** | திருகோணமலை | 0 | 0 |
| **20** | மன்னார் | 0 | 0 |
| **21** | மட்டக்களப்பு | 0 | 0 |
| **22** | வவுனியா | 0 | 0 |
| **23** | கிளிநொச்சி | 0 | 0 |
| **24** | அம்பாறை | 15000 | 3 |
| **25** | யாழ்ப்பாணம் | 0 | 0 |
| | மொத்தம் | **210500.00** | **62** |




## 5.10 செனஹச சேமிப்புக் கணக்கு

சுனாமி அனர்த்தத்தினால் பெற்றோர் இரண்டு பேரையும் இழந்துள்ள 18 வயதுக்குக் குறைவான சிறுவர்களுக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமாகும். 2006 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் போது சிறுவர்கள் 689 பேர் இதில் உள்ளடக்கப்பட்டார்கள். 2016 டிசம்பர் மாதமளவில் இதிலிருந்த சிறுவர்களின் எண்ணிக்கை 52 பேராகும். ஒவ்வொரு மாதமும் 18 வயதைப் பூர்த்தி செய்கின்ற சிறுவர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நீக்கப்படுகின்றார்கள்.

இந்தத் திணைக்களம், மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்துடன் இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்றது. ஒவ்வொரு மாதமும் குறித்த சிறுவர்களுக்காக இந்தத் திணைக்களத்தினால் மக்கள் வங்கிக்கு (காசோலை மூலம்) பணம் அனுப்பப்படுகின்றது.

18 வயது பூர்த்தியடைகின்ற சிறுவர்கள் தொடர்பாக மக்கள் வங்கி மூலம் திணைக்களத்திற்கு மாதாந்தம் அறிவிக்கப்படுவதுடன், குறித்த சிறுவர்களுக்கு உரிய நிதியை அனுப்பிய பின்னர் மக்கள் வங்கி அது பற்றிய தகவல்களை திணைக்களத்திற்கு அறியத்தரும்.

**2017ஆம் ஆண்டு செனெஹச கணக்கின் நிதி செலவிடப்பட்ட முறை**

| தொடர் இல. | மாதம் | சிறுவர்கள் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 01 | ஜனவரி | 52 | 78000.00 |
| 02 | பெப்ருவரி | 52 | 78000.00 |
| 03 | மார்ச் | 52 | 78000.00 |
| 04 | ஏப்ரல் | 52 | 78000.00 |
| 05 | மே | 52 | 78000.00 |
| 06 | யூன் | 52 | 78000.00 |
| 07 | யூலை | 52 | 78000.00 |
| 08 | ஆகஸ்ட் | 52 | 78000.00 |
| 09 | செப்தெம்பர் | 52 | 78000.00 |
| 10 | அக்டோபர் | 52 | 78000.00 |
| 11 | நவம்பர் | 51 | 76500.00 |
| 12 | டிசம்பர் | 51 | 76500.00 |
| | மொத்தம் | | 933000.00 |

## 5.11 சிறுவர் கழகங்களையும், சிறுவர் சபைகளையும் தாபிக்கும் கருத்திட்டம்

சிறுவர் உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 12,13,14 ஆகிய யாப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறுவர்களின் பங்கேட்பு உரிமையை உறுதி செய்து சிறுவர்களை வலுவூட்டுதை பிரதான நோக்காகக் கொண்டு 2007 ஆம் ஆண்டு கிராம அலுவலர் மட்டத்தில் சிறுவர் கழகங்கள் தாபிக்கப்பட்டன. இவ்வாறு தாபிக்கப்பட்ட சிறுவர் கழகங்கள் ஊடாக சிறுவர்களின் அபிவிருத்திக்கும், திறன் விருத்திக்குமான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள சிறுவர் கழகங்களை ஒன்றிணைத்து பிரதேச சிறுவர் சபையும், பிரதேச சிறுவர் சபையின் அலுவலர்களை ஒன்றிணைத்து மாவட்ட சிறுவர் சபையும், மாவட்ட சிறுவர் சபைகளை ஒன்றிணைத்து தேசிய சிறுவர் சபையும் உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறுவர் அமைப்புக்களின் ஒழுங்கமைப்பு

(சிறுவர் கழகம், சிறுவர் சபை ஒழுங்கமைப்பு)

தேசிய சிறுவர் சபை – தேசிய மட்டம்

↑

மாவட்ட சிறுவர் சபை – மாவட்ட மட்டம்

↑

பிரதேச சிறுவர் சபை – பிரதேச மட்டம்

↑

சிறுவர் கழகம் - கிராமிய மட்டம்

இக்கருத்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் சேவ் த சில்ரன் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு நிதியத்தினால் அமுல்படுத்தப்பட்டு பிரதேச மற்றும் மாவட்ட சிறுவர் சபைகள் வலுவூட்டப்பட்டுள்ளன.

பிரதேச / மாவட்ட சிறுவர் சபைக்கு உரித்தான சிறுவர்களை ஒன்றுதிரட்டி வருடத்தில் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் அறிவுறுத்துவதற்காக பிரதேச /மாவட்ட சிறுவர் சபைகள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை ஒன்றுகூட்டப்படுகின்றது. எனவே பிரதேச மற்றும் மாவட்ட சிறுவர் சபைகளின் செயற்பாட்டை மேம்படுத்தும் வகையில் அவற்றை இலகுபடுத்தும் பொறிமுறையை வலுவூட்டுவதற்காக ஒரு பிரதேச, மாவட்ட அலுவலகத்திற்கு ரூபா 10,000/- ஆன தொகை வழங்கப்பட்டுள்ளது.

1. இலகுபடுத்துவோரை பயிற்றுவித்தல்

இலங்கையில் சிறுவர் சபைகள் கட்டமைப்பினுள் சிறுவர்களின் பங்கேட்பு பற்றிய ஆராய்ச்சி சிபாரிசுகளுக்கு அமைய ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்தும் சிறுவர் கழகங்களை வலுவூட்டல் மற்றும் பேணிவருவதற்கு சிறுவர் கழக இலகுபடுத்துனர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து இலகுபடுத்துவோர் 20 பேர் வீதம் (இரண்டு அலுலவர்கள் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் இலகுபடுத்துவோர் 40 பேர் வீதம்) சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

2. அர்த்தப்பூர்வமான சிறுவர் பங்கேட்பு பற்றிய தேசிய வழிகாட்டல் தொகுப்பு தொடர்பிலான பயிற்சிச் செயலமர்வு

நன்னத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் சிறுவர்களின் பங்கேட்பு உரிமையை உறுதி செய்வதற்காக அர்த்தப்பூர்வமான சிறுவர் பங்கேட்பு பற்றிய தேசிய வழிகாட்டல் தொகுப்பு வெளியிடப்பட்டு அது பற்றி மாடவ்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். அதற்கமைய, மேற்படி பயிற்றுவிப்பாளர்களினால் அவ்வவ் மாவட்டங்களில் கடமையாற்றி வருகின்ற சகல சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள், உதவியாளர்களுக்கு மேற்படி பயிற்சியைப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

3. சிறுவர்களின் முன்னெடுப்புடன் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

பிரதேசத்தில் ஏதும் சிக்கல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு பொதுவாக அல்லது சிறுவர்கள் சிலரை இலக்காகக் கொண்டு நேரடியாக மேற்படி சிறுவர்களுக்குப் பயன்கள் கிடைக்கின்ற மாவட்ட சிறுவர் சபை அல்லது பிரதேச சிறுவர் சபையொன்றின் சிறுவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைகளுக்காக ஒரு மாவட்டத்திற்கு ரூபா 40,000/- ஆன தொகை வழங்கப்பட்டது.

4. தேசிய சிறுவர் சபையின் சிறுவர்களுக்கு ஆளுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மனப்பாங்குசார் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற சிறுவர்களின் பங்கேட்பு உரிமையை உறுதி செய்கின்ற சமூகக் கட்டமைப்பின் தேசிய மட்டத்திலான அலகாக தேசிய சிறுவர் சபை உள்ளது. 2016/2017 இன் தேசிய சிறுவர்சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள தேசிய சிறுவர் சபையின் பிள்ளைகளுக்காக தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று 2017.05.20 மற்றும் 21 ஆம் திகதிகளில் பிலியந்தல சுபோதி நிலையத்தில் பின்வரும் நோக்கங்களை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டது.

5. நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் செயற்பணி பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொடுத்தல்

- தேசிய சிறுவர் சபையை முனைப்புடன் செயற்படல் செய்தல்.
- சிறுவர்களின் மனப்பாங்கு, திறமைகளை மேம்படுத்தல்.
- சிறுவர்கள் மத்தியில் ஆளுமைவிருத்தியை ஏற்படுத்தல்.
- சிறுவர்களின் கடமைகள், உரிமைகள் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை விருத்திசெய்தல்.
- தேசிய சிறுவர் சபையின் குழுக்கள் பற்றிய விசேட அறிவைப் பெற்றுக் கொடுத்தல்.
- இந்த அறிவை கிராமிய, பிரதேச மட்டம் வரை சிறுவர்கள் ஊடாக வியாபிக்கச் செய்தல்.



**2017 இல் சிறுவர் சபைகள் மற்றும் சிறுவர் கழகங்களுக்காக வழங்கப்பட்ட செலவினம்**

| # | மாவட்டம் | செலவினம் (ரூ.) | | | |
|---|---|---|---|---|---|
| | | சிறுவர் சபை / சிறுவர் கழக கூட்டங்களை இலகுபடுத்தல் | இலகுபடுத்துவோரை பயிற்றுவித்தல் | அர்த்தப்பூர்வமான சிறுவர் பங்கேட்பு பற்றிய தேசிய வழிகாட்டல் தொகுப்பு சம்பந்தமான பயிற்சி செயலமர்வு | சிறுவர்களின் தலைமையில் மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு |
| 1 | கொழும்பு | 140,000 | 300,000 | 180,000 | - |
| 2 | களுத்துறை | 150,000 | 340,000 | 20,250 | 40,000 |
| 3 | கம்பஹா | 140,000 | 400,000 | 23,625 | 40,000 |
| 4 | கண்டி | 210,000 | 520,000 | 30,375 | - |
| 5 | மாத்தளை | 110,000 | 220,000 | 13,500 | - |
| 6 | நுவரெலியா | 60,000 | 160,000 | 10,125 | - |
| 7 | காலி | 200,000 | 420,000 | 24,750 | 40,000 |
| 8 | மாத்தறை | 175,000 | 340,000 | 20,250 | - |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | ஹம்பாந்தோட்டை | 130,000 | 300,000 | 18,000 | - |
| 10 | இரத்தினபுரி | 180,000 | 340,000 | 20,250 | - |
| 11 | கேகாலை | 120,000 | 220,000 | 16,875 | 40,000 |
| 12 | அநுராதபுரம் | 230,000 | 460,000 | 27,000 | - |
| 13 | பொலன்னறுவை | 80,000 | 180,000 | 11,250 | 40,000 |
| 14 | புத்தளம் | 170,000 | 320,000 | 19,125 | - |
| 15 | குருநாகல் | 310,000 | 800,000 | 46,125 | - |
| 16 | பதுளை | 150,000 | 320,000 | 20,250 | - |
| 17 | மொனராகலை | 120,000 | 220,000 | 13,500 | - |
| 18 | திருகோணமலை | 90,000 | 220,000 | - | - |
| 19 | அம்பாரை | 210,000 | 400,000 | | - |
| 20 | மட்டக்களப்பு | 140,000 | 300,000 | 50,625 | - |
| 21 | யாழ்ப்பாணம் | 150,000 | 320,000 | 39,375 | - |
| 22 | கிளிநொச்சி | 50,000 | 80,000 | - | - |
| 23 | மன்னார் | 60,000 | 100,000 | - | - |
| 24 | முல்லைத்தீவு | 40,000 | 120,000 | - | - |
| 25 | வவுனியா | 50,000 | 80,000 | - | - |
| மொத்தம் | | **3,465,000** | **7,540,000** | **443,250** | **200,000** |

**நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சிறுவர் கழகங்களின் எண்ணிக்கை**

| | மாவட்டம் | 2017 இல் பதிவு செய்யப்பட்ட சிறுவர் கழகங்கள் | பதிவு செய்யப்பட்ட மொத்த சிறுவர் கழகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **1** | கொழும்பு | 12 | 215 |
| **2** | களுத்துறை | 16 | 193 |
| **3** | கம்பஹா | 24 | 302 |
| **4** | கண்டி | 59 | 442 |
| **5** | மாத்தளை | 27 | 165 |
| **6** | நுவரெலியா | 3 | 124 |
| **7** | காலி | 10 | 246 |
| **8** | மாத்தறை | 10 | 192 |
| **9** | ஹம்பாந்தோட்டை | 8 | 205 |
| **10** | இரத்தினபுரி | 27 | 215 |
| **11** | கேகாலை | 21 | 177 |
| **12** | அநுராதபுரம் | 12 | 249 |
| **13** | பொலன்னறுவை | 0 | 66 |
| **14** | புத்தளம் | 37 | 201 |
| **15** | குருநாகல் | 41 | 587 |
| **16** | பதுளை | 5 | 145 |
| **17** | மொனராகலை | 0 | 164 |
| **18** | திருகோணமலை | 0 | 78 |

| | | | |
|---|---|---|---|
| **19** | அம்பாரை | 8 | 131 |
| **20** | மட்டக்களப்பு | 7 | 83 |
| **21** | யாழ்ப்பாணம் | 7 | 95 |
| **22** | கிளிநொச்சி | 50 | 58 |
| **23** | மன்னார் | 8 | 30 |
| **24** | முல்லைத்தீவு | 8 | 30 |
| **25** | வவுனியா | 0 | 38 |
| மொத்தம் | | 400 | 4431 |

**2015 முதல் 2017 வரை சிறுவர் கழகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள முறை**



## 5.12 வீதிச் சிறுவர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் துஷ்பிரயோகத்தைக் குறைத்து பாதுகாப்பான சிறுவர் பரம்பரையொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளும் போது வீதிச் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரிக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது மிகவும் முக்கியமானதாகும். இதன் கீழ் பரவலாக கொழும்பு, கம்பஹா, கண்டி மற்றும் கதிர்காமம் பிரதேசங்களில் பரவலாக வாழும் வீதிச் சிறுவர்கள் பற்றிய நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாடுகளின் கீழ்மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் வீதிச் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், பாதுகாப்பு, சிறுவர்களின் ஆக்கபூர்வமானதன்மை, மறைந்துள்ள திறமைகள், தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றலை மேம்படுத்தி ஆளுமை மற்றும் தலைமைத்துவ பண்புகளை வளர்ப்பதற்கு உதவி வழங்க முடிந்துள்ளது.

வீதிச் சிறுவர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

| # | மாவட்டம் | நிகழ்ச்சித்திட்டம் / பணி | வழங்கப்பட்ட நிதி /செலவினம் (ரூ.) |
|---|---|---|---|
| 1 | கொழும்பு | வீதிச் சிறுவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் / பாதுகாவளர்களுக்கான மருத்துவ சிகிச்சை முகாமை நடாத்தல் | 30,000 |
| 2 | மொனராகலை | பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை பாடசாலைகளில் அனுமதித்தல் | 30,000 |
| | | கதிர்காமம் வீதிச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு | 13,949.86 |
| 3 | கண்டி | வீதிச் சிறுவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் / பாதுகாவளர்களுக்கான மருத்துவ சிகிச்சை முகாமை நடாத்தல் | 30,000 |
| | | வீதிகளில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் ஆளுமை அபிவிருத்திக்கான செயலமர்வு | 50,000 |
| 4 | கம்பஹா | வீதிச் சிறுவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் / பாதுகாவளர்களுக்கான மருத்துவ சிகிச்சை முகாமை நடாத்தல் | 30,000 |
| மொத்தம் | | | 183,949.86 |

## 5.13 சிறுவர் மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம் - 2017

சிறுவர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் சிறுவர் மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாதிரிக் கிராமங்கள், சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஆக்கபூர்வமாக கட்டியெழுப்பப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பயன்படுத்திக் கொண்டு, சமுதாயத்தின் செயல்ரீதியான தலையீட்டுடன் அமுல்படுத்தப்பட்டுள்ளன. சிறுவர் ஆலோசனைக் குழு அலுவலர்களின் தலையீடானது இப்பொறிமுறையை வலுவூட்டக் காரணமாக அமைந்துள்ளது.

திணைக்களத்தினால் சிறுவர்களுக்காக அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் இக்கிராமங்களில் நேரடியாக அமுல்படுத்தப்பட முடியும். சிறுவர்களின் பங்கேட்பு உரிமையை உறுதி செய்வதை நோக்காக்க கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழச்சித்திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை ஆக்கபூர்வமாக இந்தக் கிராமங்களில் மேற்கொள்ளவும் வாய்ப்பு உள்ளது.

மாதிரிச் சிறுவர் கிராமங்கள் இனங்காணப்படுவது கிராமத்தில் சிறுவர்களுக்குக் காணப்படுகின்ற அச்சுறுத்தலான மட்டங்களுக்கு அமையவாகும் என்பதுடன், சமுதாயத்தின் உதவி மற்றும் தலையீட்டின் மூலம் தற்போது கிராமத்தில் காணப்படுகின்ற நடைமுறைகளை மாற்றியமைக்கும் செயன்முறைகள் அமுல்படுத்தப்படுவதுடன், மேற்படி செயன்முறை ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படுகின்ற நடைமுறைகளுக்கு உகந்தவாறு ஒழுங்குபடுத்தப்படும். இந்த முறையியல் ஊடாக சமுதாயத்தின் தீர்மானங்கள் மற்றும் தேவைப்பாடுகளின் அடிப்படையிலான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கவும் ஆற்றல் கிடைக்கும்.

இந்த ஆண்டில் போதை வஸ்துப் பயன்பாட்டைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆக்கபூர்வமாக மாதிரிக் கிராமங்களில் மேற்கொள்ளப்படல் வேண்டும். இப்பணிக்காக ஒவ்வொரு சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலருக்கும், உதவியாளருக்கும் ரூபா 3000.00 வீதமான ஏற்பாடுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

## 5.14 சிறுவர் உரிமைகள் பற்றிய நடவடிக்கைக் குழு நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தை அமுல்படுத்தும் பணியின் போது சமுதாய அடிப்படையிலான சமூகக் கட்டமைப்புக்களைத் தாபித்தல், வலுவூட்டல் என்பன இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளாகும். அதற்கமை, சிறுவர் உரிமைகளை சமுதாயத்தினரிடம் கொண்டுசெல்லல், சிறுவர்கள் விடயத்திலுள்ள சிக்கல்கள் தொடர்பில் காத்திரமான தலையீட்டைப் பெற்றுக் கொடுத்தல், மேற்படி பணிகளை அரசாங்கம் என்றவகையில் நடவடிக்கைச் செயன்முறையில் உள்ளடக்குவதற்காக சிறுவர் உரிமைகள் செயற்பாட்டில் உட்புகுத்துவதற்காக சிறுவர் உரிமைகளை அமுல்படுத்தும் நடவடிக்கைக் குழுச் செயன்முறை பேணிவரப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் கிராமிய மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரையான ஒவ்வொரு நிருவாக மட்டத்திலும் அலுவலர்கள் மற்றும் சமுதாயத்தை தொடர்புபடுத்திக் கொண்டு பேணிவரப்படுகின்ற குழுக் கட்டமைப்பாக இயங்கிவருகின்றது. அதற்கமைய கிராம அலுலவர் பிரிவு மட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. அதற்கு நியாயாதிக்க விடயங்கள் மற்றும் முறையானதன்மையை ஏற்படுத்துவதற்காக மிகவும் முறையானதொரு வழிகாட்டல் தொகுப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரதேச வழிகாட்டல்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், பிரதேச செயலாளரின் பங்கேட்புடன் பிரதேச நடவடிக்கைக் குழு, மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு, மாகாண சிறுவர் அபிவிருத்திக் குழு, மாகாண சிறுவர் அபிவிருத்திக் குழு மற்றும் தேசிய வழிப்படுத்தல் குழு என்ற வகையில் இந்தக் குழுச் செயன்முறை விரிவடைந்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு மிகவும் பலமானதொரு அடிப்படையைத் தயார் செய்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று அங்கீகரித்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்குச் சமாந்தரமாக 01/2018 ஆம் இலக்கத்தைக் கொண்டதாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினால் சகல அரசதரப்பிர்களுக்கும் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன் போது அவ்வவ் குழுக்களின் மட்டங்களில் கட்டமைப்பு, செயற்பணி மிகவும் விசேடமான முறையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த செயன்முறையின் கீழ் நாடு முழுவதிலும் கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள் சுமார் 7000 தாபிக்கப்பட்டுள்ளதுடன், 331 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், பிரதேச சிறுவர் உரிமைகள் வழிப்படுத்தல் குழுக்கள் இயங்கிவருகின்றன. மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவானது மாவட்ட செயலாளரின் தலைமையில் மேற்கொள்ளப்படுவதுடன், 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் மேற்படி குழு தாபிக்கப்பட்டுள்ளது. 01/2018 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய மாகாண சிறுவர் அபிவிருத்திக் குழுக்களை தாபிக்க வேண்டும் என்பதுடன், தற்போது தென் மாகாணம், மத்திய, கிழக்கு மாகாணங்களின் மாகாணக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. கதேசிய குழுவும் முனைப்புடன் இயங்கி வருகின்றது. 2017 ஆம் ஆண்டில் இந்தக் குழுச் செயன்முறையில் கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்களுக்கு புதிய வழிகாட்டல்களை அறிமுகம் செய்வதற்காக ரூ.மி. 3.31 செலவு செய்யப்பட்டதுடன், பிரதேச சிறுவர் உரிமைகள் பற்றிய நடவடிக்கைக் குழுக்களுக்காக ரூ.மி. 2.33 செலவிடப்பட்டுள்ளது.

## 5.15 சிறுவர் நட்புறவு நிலையங்கள்

அச்சுறுத்தல்மிக்க குடும்பச் சூழலில் தனிமைப்படுகின்ற சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து அவர்கள் தமது ஓய்வு நேரத்தை பாதுகாப்பாக கழிப்பதற்கு இந்த நிலையங்களின் ஊடாக தேவையான அரவணைப்பு வழங்கப்படும். பெற்றோர் இருவரும் தமது வீடுகளிலிருந்து வெளியேறிச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் அறிவு, ஆற்றல்களை வளர்ப்பதற்குத் தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்படும். இதன் போது நூலகம், உள்ளக விளையாட்டுக்கள் மற்றும் வெளிப்புற விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வாய்ப்பும் இவர்களுக்குக் கிடைக்கின்றது.

## 5.16 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

சமூகத்தில் முறைகேடான சிக்கல்களை எதிர்நோக்குகின்ற சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு செயற்பாடுகளின் மூலம் சிறுவர்களை வலுவூட்டல் மற்றும் சமூகத்தின் பல்வேறு பகுதியினர் அறிவுறுத்தப்படுகின்றனர். பிரதேச மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் சிறுவர்கள் எதிர்கொள்கின்ற சிக்கல்களை இனங்கண்டு, தமது சிக்கல்களை குறைப்பதற்காக சிறுவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் கிராமிய மக்களுக்குத் தேவையான அறிவு வழங்கப்படுகின்றது.

பிரதேச செயலாளர் பிரிவுகளில் சேவையாற்றுகின்ற அலுவலர்களினால் அவர்களின் தொகுதிகள் தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல்கள் பற்றிய பல்வேறு கருத்திட்டங்கள் தயார் செய்யப்பட்டு எம்மிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. மேற்படி கருத்திட்டங்கள் தொடர்பாகவும் மாவட்ட கருத்திட்டங்கள் தொடர்பாகவும் விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளுக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டு இதற்காக ரூபா 2630932.00 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

## 5.17 பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் தேசிய நிலையம்

பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள மற்றும் துஷ்பிரயோக சம்பவமொன்று அல்லது உரிமை மீறல் இடம்பெற்றுள்ளமை காரணமாக உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள சிறுமியருக்கு மாத்திரம் ஆலோசனை வழங்குவதற்காக தாபிக்கப்பட்டுள்ளதொரு நிறுவனமாகும். மத்திய அரசின் கீழுள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான ஒரே நிறுவனமாகவும் இது உள்ளது.

நீதிமன்ற உத்தரவின் பேரில் அனுப்பப்படுகின்ற 12-18 வயதுக்கு இடைப்பட்ட சிறுமியர்கள் மாகாண நன்னடத்தை ஆணையாளரின் சிபாரிசின் அடிப்படையில் இந்த நிறுவனத்தில் பயிற்சிக்காக அனுமதிக்கப்படுகின்றனர். 06 மாதகாலப் பகுதிக்கு வதிவிட பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், சிறுமியர் 20 பேருக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் காலப்பகுதிக்குள் சிறுமியருக்குத் தேவையான தொழில்சார் பயிற்சி, முறைசார் கல்வி பெறாதவர்களுக்கு முறைசாரா கல்வி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இந்தப் பயிற்சிக் காலத்திற்குள் களியாட்ட சுற்றுலாக்கள், சமய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் யோகாப்பியாச நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்படும். இதன் மூலம் பிள்ளைகளின் உளவியல் சிக்கல்களுக்கு நிவாரணம் கிடைக்கும்.

பிள்ளைகளுக்காகத் தாபிக்கப்பட்டுள்ள குழுக்களை நடாத்தி அவற்றின் தீர்மானங்களுக்கு அமைய சிறுமியரை பெற்றோர் அல்லது பாதுகாவளரிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.





## 5.18 சிறுவர் இல்லங்களின் தரத்தை மேம்படுத்தல்

நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் தாபிக்கப்பட்டுள்ள அரச மற்றும் பதிவு செய்யப்பட்ட தொண்டர் சிறுவர் இல்லங்களின் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் தேவைகளை தரமானதாகப் பேணிவருவதற்கான தேவைகள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர்களினால் இனங்காணப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்ற அபிவிருத்திப் பிரேரணைகளுக்குத் தேவையான உதவிகள் வழங்குவதும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

வருடாந்தம் இந்தத் திணைக்களத்திற்கு கிடைக்கின்ற இனங்காணப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பிரேரணைகள் தொடர்பில் கவனம் செலுத்திய பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற மதிப்பீட்டுத் தொகை பூரணமாக அல்லது மதிப்பீட்டுத் தொகையில் ஒரு பகுதி மாகாண ஆணையாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும்.

அதற்கமைய குறித்த கருத்திட்டத்தை முறையாகப் பூர்த்தி செய்த பின்னர் உரிய பட்டியல்கள் மற்றும் செலவின அறிக்கைகளுடன் உரிய முன்னேற்றத்தை தலைமை அலுவலகத்திற்குப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்கமைய 2017 ஆம் ஆண்டில் இந்த செலவுத் தலைப்பின் கீழ் நாடு முழுவதிலும் அமைந்துள்ள சிறுவர் இல்லங்கள் மற்றும் பரத்த சிறுவர் பயிற்சி ஆலோசனை சேவைத் தேசிய நிலையத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 2,09,67,734.49 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

## 5.19 நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் திறமைகளை வளர்த்தல்

இப்பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.மி. 5.0 ஆகும். பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் தேசிய நிலையத்தின் சிறுவர்களுக்கு மற்றும் ஒவ்வொரு மாகாணத்திலும் சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் சுயமான ஆற்றல்களை வளர்க்கும் நோக்கத்துடன் அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமாகும். சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களுக்கு உரிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு ஒவ்வொரு மாகாணத்தினதும் சிறுவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்த பிரேரணைகளை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டது. மேற்படி பிரேரணைகளிலிருந்து சிறுவர்களுக்கு உகந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
மேலும், சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்கள் சமூகமயப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தொழில்களில் ஈடுபடுவதற்கான தகைமைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் பல்வேறு தொழில்சார் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக மாகாண ஆணையாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைகளுக்கு அமைய ரூபா 2547267.00 ஆன ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 5.20 சிறுவர் இல்லங்களைக் கண்காணிப்புச் செய்தல்

இந்த செலவுத் தலைப்பின் கீழ் சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், சிறுவர் இல்லங்களுக்குத் தேவையான நிலையான சொத்துக்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சிறுவர் இல்லங்களின் பதவியணியை பயிற்றுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சிறுவர் இல்லங்களை கண்காணிப்புச் செய்வதும் இதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணியொன்றாகும். 2017 ஆம் ஆண்டு இதற்காக ரூபா 2547267.00 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

## 5.21 யுனிசெவ் கருத்திட்டம்

இந்தத் திணைக்களத்தினால் யுனிசெவ் கருத்திட்டத்துடன் இணைந்து யுனிசெவ் நிறுவனத்தின் நிதி அனுசரணையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற கருத்திட்டமாகும்.

## 5.22 2017 உலக சிறுவர் தினம்

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு இந்தத் திணைக்களம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்றது. இதற்கமைய 2017 ஆம் ஆண்டில் உலக சிறுவர் தினமானது 'பெற்றோர் பாசத்தை பேணுவோம் - அழகிய உலகை நோக்கி சிறுவர்களை அழைப்போம்' எனும் தொணிப்பொருளின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தில் இந்நிகழ்வு நடாத்தப்பட்டது.
மேலும், வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம் மாவட்டத்திற்கு உரித்தான சகல இரண்டாம் நிலைப் பாடசாலைகளிலும் வயது 12-16 இற்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்கு இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் இளப் பராயத்தின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றை எமது அமைச்சினால் பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுலவர்கள் ஊடாக அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் பிள்ளைகள் 100 முதல் 125 பேர் வரை பங்கேற்றனர்.

## 5.23 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் பற்றிய தகவல்கள்

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களத்திற்கு பெயர் குறிப்பிட்டும், அநாமதேய அடிப்படையிலும், எழுத்து மூலமும், தொலைபேசி மூலமும் 12093 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், மேற்படி சகல முறைப்பாடுகளையும் அடுத்த கட்ட விசாரணை நடவடிக்கைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக பல்வேறு நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது முறைப்பாட்டின் தன்மைக்கு அமைய பிரதேச செயலாளர்கள் ஊடாக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களுக்கும், பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திற்கும், உரிய பொலிஸ் நிலையங்களுக்கும், தொழில் திணைக்களம், மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் போன்றவற்றிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய முறைப்பாடுகள் தொடர்பில் அவசியமான ஆலோசனைகள் தொலைபேசி ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டன.

| மாவட்டம் | சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி அறிக்கையிடப்பட்ட முறைப்பாட்டின் தன்மை | | | | | | | | முறைப்பாட்டின் மூலம் (புள்ளிவிபர ரீதியில்) | | | | மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தற்போதைய நிலைமை (புள்ளிவிபர ரீதியில்) | | | வேறு விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பாடசாலைக்கு செல்லாமை | பராயமடையாத திருமணம் / பராயமடையாது கர்ப்பமடைதல் | உடல் ரீதியாக தண்டித்தல் | உளவியல் துஷ்பிரயோகம் | சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் | பாரபட்சம் காட்டல் | சிறுவர் தொழிலாளி | வேறு | தலைமை அலுவலகம் மூலம் | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஊடாக (1929) (மூலம்) | தொலைபேசி மூலம் | வேறு | | பூரண தீர்வு வழங்கியமை | குறுங்காலத் தீர்வு | வேறு நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல் | |
| அம்பாரை | 296 | 104 | 35 | 119 | 13 | 62 | 58 | 52 | 63 | 105 | 342 | 229 | **739** | 408 | 221 | 110 | 0 |
| அநுராதபுரம் | 99 | 26 | 39 | 20 | 5 | 51 | 3 | 5 | 6 | 68 | 54 | 120 | **248** | 117 | 73 | 55 | 3 |
| மட்டக்களப்பு | 252 | 65 | 27 | 46 | 21 | 143 | 20 | 51 | 25 | 75 | 198 | 327 | **625** | 345 | 167 | 113 | 0 |
| பதுளை | 61 | 15 | 7 | 6 | 7 | 53 | 1 | 19 | 0 | 8 | 15 | 146 | **169** | 96 | 31 | 41 | 1 |
| கொழும்பு | 819 | 15 | 39 | 123 | 23 | 54 | 15 | 99 | 37 | 57 | 172 | 921 | **1187** | 667 | 351 | 163 | 6 |
| காலி | 486 | 22 | 46 | 153 | 18 | 141 | 8 | 123 | 3 | 11 | 209 | 774 | **997** | 473 | 315 | 208 | 1 |
| கம்பஹா | 343 | 21 | 46 | 67 | 35 | 52 | 15 | 124 | 41 | 0 | 141 | 521 | **703** | 403 | 137 | 163 | 0 |
| ஹம்பாந்தோட்டை | 189 | 9 | 15 | 112 | 16 | 65 | 2 | 70 | 1 | 13 | 123 | 341 | **478** | 145 | 261 | 72 | 0 |
| யாழ்ப்பாணம் | 516 | 92 | 43 | 30 | 20 | 66 | 30 | 56 | 0 | 37 | 171 | 645 | **853** | 551 | 241 | 61 | 0 |
| களுத்துறை | 217 | 14 | 20 | 58 | 24 | 70 | 3 | 30 | 13 | 4 | 53 | 366 | **436** | 249 | 101 | 86 | 0 |
| கண்டி | 204 | 3 | 8 | 12 | 13 | 62 | 0 | 17 | 11 | 14 | 27 | 267 | **319** | 110 | 105 | 104 | 0 |
| கேகாலை | 174 | 12 | 10 | 57 | 25 | 118 | 0 | 88 | 47 | 115 | 58 | 264 | **484** | 225 | 114 | 145 | 0 |
| கிளிநொச்சி | 132 | 28 | 11 | 2 | 22 | 27 | 8 | 11 | 11 | 24 | 154 | 52 | **241** | 107 | 84 | 50 | 0 |
| குருநாகல் | 495 | 73 | 60 | 106 | 30 | 178 | 2 | 140 | 21 | 110 | 195 | 758 | **1084** | 664 | 271 | 149 | 0 |

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மன்னார் | 119 | 27 | 20 | 15 | 8 | 11 | 2 | 53 | 34 | 41 | 53 | 127 | **255** | 156 | 58 | 41 | 0 |
| மாத்தளை | 123 | 17 | 8 | 12 | 11 | 35 | 0 | 7 | 0 | 2 | 24 | 187 | **213** | 81 | 78 | 43 | 11 |
| மாத்தறை | 409 | 13 | 28 | 103 | 17 | 192 | 1 | 75 | 94 | 71 | 102 | 571 | **838** | 463 | 272 | 103 | 0 |
| மொனராகலை | 10 | 1 | 6 | 5 | 2 | 7 | 0 | 6 | 0 | 1 | 11 | 25 | **37** | 21 | 5 | 11 | 0 |
| முல்லைத்தீவு | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** | 0 | 0 | 0 | 0 |
| நுவரெலியா | 77 | 7 | 11 | 42 | 5 | 62 | 2 | 11 | 20 | 5 | 50 | 142 | **217** | 125 | 57 | 34 | 1 |
| பொலன்னறுவை | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** | 0 | 0 | 0 | 0 |
| புத்தளம் | 231 | 30 | 11 | 14 | 26 | 44 | 2 | 117 | 11 | 2 | 115 | 347 | **475** | 168 | 194 | 112 | 1 |
| இரத்தினபுரி | 253 | 27 | 51 | 39 | 22 | 63 | 6 | 77 | 0 | 1 | 111 | 426 | **538** | 296 | 124 | 118 | 0 |
| வவுனியா | 230 | 26 | 126 | 159 | 25 | 165 | 4 | 5 | 60 | 94 | 342 | 244 | **740** | 287 | 235 | 218 | 0 |
| திருகோணமலை | 127 | 13 | 27 | 0 | 10 | 24 | 15 | 1 | 0 | 6 | 91 | 120 | **217** | 75 | 74 | 68 | 0 |
| மொத்தம் | **5862** | **660** | **694** | **1300** | **398** | **1745** | **197** | **1237** | **498** | **864** | **2811** | **7920** | **12093** | **6232** | **3569** | **2268** | **24** |

## 5.24 பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்தல்

அச்சுறுல்லதான நிலைமையில் காணப்படுகின்ற சிறுவர்களுக்கு நீண்டகால பாதுகாப்பை உறுதி செய்யும் வேலைத்திட்டமாக பாதுகாப்புத் திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன. சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் உபாயமுறையிலான முறையியல் ஒன்றாக இதன் தேவை எழுவது 2011 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் அச்சுறுத்தலான சிறுவர்களை இனங்காண்பதற்காக நடாத்தப்பட்ட ஆய்வில் பெருமளவு எண்ணிக்கையான சிறுவர்கள் இனங்காணப்பட்டதனாலாகும்.


இவ்வாறு இனங்காணப்பட்ட சிறுவர்களின் அச்சுறுத்தல் நிலைமைகள் பலதரப்பட்டவையாகும். அவர்களின் அச்சுறுத்தலான நிலைமைகளுக்கு அமைய மேற்படி அச்சுறுத்தல் நிலைமைகளைத் தவிர்த்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பாதுகாப்புத் திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன. இவை குறுங்கால அடிப்படையிலும், பல வருடங்கள் நீடிக்கின்ற நீண்ட கால அடிப்படையிலும் அமுல்படுத்தப்படுவதுடன், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

இந்தப் பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வது முதல் அமுல்படுத்தல், மதிப்பீடு செய்தல் உட்பட சகல நடவடிக்களின் போதும் பிற வெளிக்கள அலுவலர்களின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் போது தனி நபரிலும் பார்க்க கூட்டான அணுகுமுறை ஊடாக செயற்படுவதன் முக்கியத்துவமும் இதனூடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வதன் மூலம் பிள்ளைக்குப் பாதுகாப்பும், அபிவிருத்தியும் கிடைப்பதுடன், குடும்பங்களும் கட்டியெழுப்பப்படுகின்றன. குறிப்பாக சிறுவர்களின் போசணை மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான குடும்பங்களின் வருமான வழிமுறைகளை மேம்படுத்தல், துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கல்வி நிலைமைகளை மேம்படுத்தத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் ஆற்றலும் கிடைத்துள்ளது.

2017 ஆம் ஆண்டு பாதுகாப்புத் திட்டங்களைத் தயார் செய்வதற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட முறை பின்வருமாறாகும்.

| தொடர் இல. | மாவட்டம் | நிதிச் செலவினம் ரூபா | தயார் செய்யப்பட்ட பாதுகாப்பு திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | | | |
| 01 | கொழும்பு | 1,984,436.00 | 180 |
| 02 | களுத்துறை | 1,709.239.00 | 192 |
| 03 | கம்பஹா | 1,230,502.00 | 184 |
| 04 | காலி | 1,431,491.00 | 320 |
| 05 | மாத்தறை | 1,466,183.00 | 280 |
| 06 | ஹம்பாந்தோட்டை | 1.922,383.00 | 240 |
| 07 | பதுளை | 2,134,725.00 | 178 |
| 08 | மொனராகலை | 2.917,008.00 | 180 |
| 09 | கேகாலை | 1,267,830.00 | 118 |
| 10 | இரத்தினபுரி | 597,347.00 | 118 |
| 11 | கண்டி | 1,798,598.00 | 320 |
| 12 | நுவரெலியா | 158,982.00 | 82 |
| | | | |
| 13 | மாத்தளை | 1,357,889.00 | 95 |
| 14 | குருநாகல் | 2,627,959.00 | 521 |
| 15 | புத்தளம் | 1,222,685.00 | 152 |
| 16 | அநுராதபுரம் | 1,282,350.00 | 175 |
| 17 | பொலன்னறுவை | 143,050.00 | 62 |
| 18 | அம்பாரை | 325,092.00 | 420 |
| 19 | திருகோணமலை | 1,471,085.00 | 58 |
| 20 | மட்டக்களப்பு | 1,121,679.00 | 131 |
| 21 | யாழ்ப்பாணம் | 709,000.00 | 158 |
| 22 | மன்னார் | 1,135,460.00 | 64 |
| 23 | வவுனியா | 1,808,150.00 | 58 |
| 24 | முல்லைத்தீவு | 210,000.00 | 04 |
| 25 | கிளிநொச்சி | | 30 |
| | மொத்தம் | 32,033,123,.00 | 4320 |




## 5.25 சிறுவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு- Child – led Research

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற சிறுவர் சபை, சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டத்தை மென்மேலும் சிறுவர்களுக்கு மத்தியில் பிரபல்யப்படுத்தி சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக அவர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதை நோக்காகக் கொண்டு சிறுவர் அடிப்படையிலான ஆய்வு நிகழ்ச்சித்திட்டம் இந்தத் திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முதற் கட்டத்தின் கீழ் 11 மாவட்டங்களுக்கு ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுத்து தமது மாவட்டத்தில் சிறுவர்கள் பற்றிய சிக்கலொன்றை இனங்கண்டு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன் கீழ் பிரதானமாக 12 மாவட்டங்களின் மாவட்ட சிறுவர் சபைகளின் சிறுவர்கள் அழைக்கப்பட்டு சிறுவர் அடிப்படையிலான ஆய்வு தொடர்பில் இரண்டு நாள் செயலமர்வு நடாத்தப்பட்டது. இந்த செயலமர்வை அடுத்து ஒரு மாவட்டத்திற்கு ரூபா 40,000/- ஆன தொகை வீதம் ரூபா 444,000/-ஆன தொகை ஆய்வை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்டது.

இதன் மூன்றாவது கட்டமாக சிறுவர்களினால் ஆய்வின் மூலம் இனங்காணப்படுகின்ற சிக்கல் பற்றிய பொருத்தமான சிபாரிசுகளை உள்ளடக்கிய செயற்றிட்டம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கமைய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபா 50,000/-ஆன உச்சளவான தொகை வழங்கப்பட்டது. இதன் கீழ் 2017 ஆம் ஆண்டில் ரூபா 127,000/- ஆன தொகையை உத்தேச செயற்பாடுகளுக்காக கொழும்பு, மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னாய்வு நடவடிக்கைகள் மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலரினால் மேற்கொள்ளப்படும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செலவிடப்படும் மொத்தத் தொகை ரூபா 921,752.00 ஆகும்.

## 5.26 தெற்காசிய பிராந்திய நாடுகளின் பிள்ளைகளுக்கு எதிரான துன்புறுத்தலை ஒழிப்பதற்கான அமைப்புடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் (South Asia Initiatives End Violence Against Children –( SAIEVAC)

தெற்காசிய பிராந்திய நாடுகளில் வாழும் பிள்ளைகளின் உரிமைகளை உச்சளவில் பாதுகாக்கும் நோக்கத்துடன், சகல வகையிலுமான துன்புறுத்தல்களும் அற்ற பாதுகாப்பான சமூகச் சூழலை பிராந்திய ரீதியில் கட்டியெழுப்புவதற்காக தாபிக்கப்பட்டுள்ள இந்த அமைப்பில் இலங்கையும் அங்கத்துவம் வகிக்கின்றது. இதன் முகவர் நிறுவனமாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு பெயரிடப்பட்டுள்ளதுடன், செயல்ரீதியான நிறுவனமாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது.

பல்வேறு விடயங்கள் தொடர்பிலான பிராந்திய செயற்றிட்டங்களைத் தயார் செய்வதற்கான ஆலோசனைச் செயன்முறைக்கு இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அலுவலர்களைப் பங்கேட்கச் செய்வதும், அவ்வாறான ஆலோசனை கூட்டத்தொடர்களை இந்நாட்டில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் 2017 ஆம் ஆண்டில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய 2017 சனவரி மாதம் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் நேபாளத்தில் நடைபெற்ற செங்கல் உற்பத்திக் கைத்தொழிலில் மனித மற்றும் சிறுவர் ஊழியம் மற்றும் விலங்குகளின் நலன்புரி தொடர்பிலான நிறைவேற்று பிராந்தியக் கொள்கையைத் தயார் செய்வதற்கான சம்மேளத்தில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து அலுவலர்களை பங்கேட்கச் செய்யத் தேவையான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் பாலியல் வியாபாரம் மற்றும் சர்வதேசத்தில் சிறுவர்களின் பாதுகாப்பு பற்றிய பிராந்திய உபாயமுறையிலான திட்டத்தை பகுப்பாய்வு செய்வது தொடர்பிலான விசேட அமர்வொன்று 2017 ஆகஸ்ட் மாதம் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெற்றது. மேற்படி அமைப்பின் அங்கத்துவ நாடுகளைப் பிரதிநிதித்துவம் செய்து அலுவலர்கள் சுமார் 42 பேர் இதில் பங்கேற்றனர். இதற்கான சகல ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு மேற்படி நிகழ்ச்சித்திட்டமானது நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டன. இதன் ஆரம்ப அமர்வில் கௌரவ மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் திருமதி சந்திராணி பண்டார அவர்கள் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திருமதி சந்திராணி சேனாரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர். இதற்கான பூரண நிதி அனுசரணை தெற்காசிய பிராந்திய நாடுகளில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கான அமைப்பினால் வழங்கப்பட்டது.

## 5.27 கொமன் பொண்ட் கருத்திட்டத்தில் சிறுவர் கழக பிரதிநிதிகளை ஈடுபடுத்தல்

கொமன் பொண்ட கருத்திட்டமானது அமெரிக்காவில் அமைந்துள்ள ரியுஸ்டேஸ் சில்ரன் எனும் நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டமொன்றாகும் என்பதுடன் இதன் பிரதான நோக்கமாக இருப்பது யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளிலுள்ள பிள்ளைகளின் தலைமைத்துவம், அபிவிருத்தி மற்றும் கல்வியை மேம்படுத்தி அவர்களில் நல்லிணக்கத்தில் முனைப்புடன்செயற்படும் தலைவர்களாக பயிற்றுவிப்பதாகும். இது தொடர்பிலான செயலமர்வொன்று 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் நடைபெற்றது.இம்முறை யாழ்ப்பாணம் மாவட்ட சிறுவர் சபையில் அங்கத்துவம் வகிக்கின்ற ஒரு பிள்ளையை இதில் பங்கேட்கச் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. இது தொடர்பிலான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டு மேற்படி அனுபவத்தை சிறுவர் கழக பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்வதற்குத் தேவையான பின்னணி இந்தத் திணைக்களம் தயார் செய்தது.

## 5.28 கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தல்

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா மில்லியன் 01 ஆன ஏற்பாடு ஒதுக்கப்பட்டது.

- **யுத்தத்தினால் அங்கவீனர்களான தமிழ் சமுதாயத்தினருக்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் :**
    01. Happy Family விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை யுத்தத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்த சிறுவர் படைவீரர்களுக்காக நடாத்தல்.
    02. சுயதொழில்வாய்ப்புக்கள், உதவிகள், உபகரணம் வழங்கல்.
    03. ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
    04. சிறுவர் நட்புறவு நிலையங்களை நிர்மாணித்தல்.
    05. உதவி வழங்கல் (பாடசாலை உபகரணம்)

- **தோட்டப்புற சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் :**

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அடிப்படைகளாக, நல்லதொரு பொருளாதார முகாமைத்துவம், நல்லதொரு குடும்ப உறவு மற்றும் குடும்பத்தின் ஆரோக்கியம் மற்றும் துப்பரவேற்பாடு என்பவற்றைக் கருத முடியும். அதற்கயைம தோட்டத்துறைகளில் வாழும் சமுதாயத்தின் குடும்ப அலகுகளை பலம்மிக்கதாக மேம்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த முன்னெடுப்புக்களுக்கு அமைய பின்வரும் சிக்கல்கள் பற்றிக் கவனம் செலுத்துவதற்கு ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தன்மை தெளிவாகியுள்ளது.

01. சுகாதாரம் மற்றும் துப்பரவேற்பாட்டுச் சிக்கல்கள்
02. சிறுவர்களின் கல்வி உரிமை பற்றிய சிக்கல்கள்
03. சிறுவர்களின் பாதுகாப்பு பற்றிய சிக்கல்கள்
04. உழைக்கும் பணத்தை முறையாக பயன்படுத்தாமை பற்றிய சிக்கல்கள்
05. போதைவஸ்துப் பயன்பாடு காரணமாக ஏற்படுகின்ற சிக்கல்கள் (தாய், தந்தை)

மேற்படி சிக்கல்கள் பற்றிக் கவனம் செலுத்தி அவர்களுக்கு விசேடமான தொழில்வல்லுனர்களினூடாக அறிவைப் பெற்றுக் கொடுப்பது காலத்திற்கு மிகவும் பொருத்தமான செயற்பாடாகும். இவ்வாறு அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்காக தோட்டத்துறை சமுதாயத்தின் ஆக்கபூர்வமான பங்களிப்பைப் பெற்றுக் கொண்டு சமுதாயத்தை அறிவுறுத்துவதற்கான பல்வேறு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூபா 15,000.00 X 55 = ரூபா.825000/- ஆன ஏற்பாடுகள் பங்களிப்பாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- **பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்**

பின்வரும் தகவுதிறன்களின் கீழ் பாடசாலை உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன், ஒரு பிள்ளைக்கு ரூபா 1000.00 பெறுமதிமிக்க பாடசாலை உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

01. பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளை பாடசாலைகளில் இணைத்தல்.
02. விட்டு விட்டு பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளை ஊக்குவித்து மீண்டும் பாடசாலைமயப்படுத்தல்.
03. பெற்றோர் இருவரும் இல்லாத, கடும் பொருளாதார குறைபாடுகளுக்கு மத்தியில் கல்வியை நல்லமுறையில் கற்கின்ற பிள்ளைகளுக்கு உதவுதல்.
04. பெண்தலைமைத்துவத்தைக் கொண்டுள்ள குடும்பங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் சிறுவர்களுக்கான உதவிகள்

| தொடர் இல. | மாவட்டம் | பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை | கோரியுள்ள பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை | பிள்ளைகளின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 22 | 09 | 384 | 66 |
| 02 | பொலன்னறுவை | 07 | 02 | 57 | 21 |
| 03 | குருநாகல் | 30 | 20 | 684 | 90 |
| 04 | மாத்தளை | 11 | 06 | 231 | 33 |
| 05 | கண்டி | 20 | 16 | 1138 | 60 |
| 06 | நுவரெலியா | 05 | 01 | 22 | 15 |
| 07 | இரத்தினபுரி | 17 | 13 | 735 | 51 |
| 08 | கேகாலை | 11 | 03 | 162 | 33 |
| 09 | புத்தளம் | 16 | 11 | 900 | 48 |
| 10 | கொழும்பு | 13 | 05 | 131 | 39 |
| 11 | கம்பஹா | 13 | 05 | 119 | 39 |
| 12 | களுத்துறை | 14 | 04 | 83 | 42 |
| 13 | ஹம்பாந்தோட்டை | 12 | 06 | 170 | 36 |
| 14 | மாத்தறை | 16 | 09 | 670 | 48 |
| 15 | காலி | 19 | 04 | 240 | 57 |
| 16 | யாழ்ப்பாணம் | 15 | 08 | 608 | 45 |
| 17 | கிளிநொச்சி | 04 | 02 | 77 | 12 |
| 18 | முல்லைத்தீவு | 06 | 04 | 806 | 18 |
| 19 | வவுனியா | 04 | 01 | 60 | 12 |
| 20 | அம்பாறை | 20 | 06 | 520 | 60 |
| 21 | திருகோணமலை | 11 | 01 | 352 | 33 |
| 22 | மன்னார் | 05 | 02 | 61 | 15 |
| 23 | மட்டக்களப்பு | 14 | 05 | 254 | 42 |
| 24 | பதுளை | 15 | 11 | 589 | 45 |
| 25 | மொனராகலை | 11 | 03 | 197 | 33 |
| | மொத்தம் | 331 | 158 | 9250 | 993 |